Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 20 திங்கட்கிழமை (05.08.2013) பக்கங்கள் 20 ஓசை – 309


















# பிரசாரத்திற்கு சம்பந்தன் வேண்டாம்
# யாழ். தமிழரசுக் கட்சியினர் கோரிக்கை



வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்களுக்கு சம்பந்தனை அழைக்க வேண்டாம் என யாழ். தமிழரசுக்கட்சியினர் மாவை சேனாதிராசாவுக்கு தெரிவித்துள்ளனர். சம்பந்தன் மீது யாழ். மக்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசார மேடைகளில் ஏறினால் பெரும்பாலான யாழ். மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். இதனால் அவரை யாழ்ப்பாணம் அழைத்து வரவேண்டாம் என யாழ். தமிழரசுக் கட்சியினர் மாவை சேனாதிராசாவுக்கு தெரிவித்துள்ளதாக கூட்டமைப்பிற்கு ஆதர்வான இணையத்தளமொன்று தெரிவித்துள்ளது.

சம்பந்தன் யாழ்ப்பாணத்திற்கு பிரசாரத்திற்கு வரும்போது சிங்கக் கொடியையும் கொண்டுவந்து விடுவார் என்றும் தமிழரசுக் கட்சியில் உள்ள ஒரு சாரார் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னை இரகசியமாக சந்தித்து வருகிறார் என்றும் அவர் அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறார் என்றும் தெரிவித்திருந்தார். அடிக்கடி சந்தித்து வருபவர் வேறு யாருமல்ல சம்பந்தனே என்றும் அவர் இவ்வாறு ஜனாதிபதியைச் சந்தித்து இரகசியத் திட்டங்களை தீட்டி வருகிறார் என்றும் யாழ். தமிழரசுக் கட்சியினர் தெரிவிக்கின்றனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20 தமிழக மீனவர்கள் மன்னார் கடலில் கைது

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த தமிழக மீனவர்கள் 20 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமன்னார் கடற்பரப்பில் ஐந்து விசைப் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இவர்கள் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டதாகக் கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 20 மீனவர்கள் தலைமன்னாருக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு துறைமுக நிர்மாணம் இந்தியாவிற்குப் பாதிப்பு இல்லை

### கூறுகிறது அரசாங்கம்

சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுகத்தின் அன்னைத்துலக கொள்கலன் முனையம் இன்றைய தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் இந்தத் துறைமுக நிர்மாணம் குறித்து இந்தியா எவ்வித அச்சமும் அடையத் தேவையில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, மேற்கு கடற்பாதையில், சிங்கப்பூருக்கும், டுபாய்க்கும் நடுவில் உள்ள மிகப் பெரிய கொள்கலன் முனையமாக கொழும்புத்துறைமுகம் அமைந்துள்ளது.

500 மில்லியன் டொலர் செலவில் இந்தக் கொள்கலன் முனையத்தை வடிவமைத்த, சீன அரசுத்துறை நிறுவனமான சீன மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் இன்ரநசனல் நிறுவனம், இதில் 85 வீத உரிமையைக் கொண்டுள்ளது.

மூலோபாய கேந்திர முக்கியத்துவம் கொண்ட கொழும்புத் துறைமுகத்தில், இந்தக் கொள்

19 ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை கடும் பாதுகாப்பு

இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான மண்டபங்களின் பாதுகாப்பு கடந்த காலங்களை விட இம்முறை மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் பரீட்சை மண்டபங்கள் மற்றும் வினாத்தாள்கள் வைத்திருக்கும் பாடசாலைகளுக்கு பொலிஸார் மட்டுமே பாதுகாப்பை வழங்கினர். எனினும் இம்முறை கடந்த காலங்களைப் போலல்லாது பரீட்சைத் திணைக்களமும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பரீட்சை நடைபெறும் நாட்களில் குறிப்பாக ஒரு மாத காலத்துக்கு பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்ல

19 ஆம் பக்கம் பார்க்க

## நவிப்பிள்ளைக்கு பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படாது என்கிறது அரசு

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு நாட்டின் எந்த இடத்துக்குச் செல்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படமாட்டாது என என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். நவிப்பிள்ளையின் விஜயத்தின் போது அவரைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சை கடமைக்குச் சென்ற கான்ஸ்டபிள் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகவுள்ள உயர்தர பரீட்சை பாதுகாப்புக் கடமைக்குச் சென்ற யாழ். கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப்

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் சிறையிலிருந்த 80 தமிழர்கள் எரித்துக்கொலை

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பிரதேசத்தில் இயங்கிவந்த எல்பா 5, எல்பா 2 என்று கூறபடும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸ் பரிசோதகர் ஜெயரட்ணம் மற்றும் இராணுவ கப்டன் உள்ளிட்ட 80 தமிழர்களை விடுதலைப் புலிகள் கொலை செய்து எரித்துவிட்டதாக பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவர் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த நபர், பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு இவ்வாறு தகவல் வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கல்கிஸ்ஸை பொலிஸ் வலய பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவில் பணியாற்றிய பொலிஸ் பரிசோதகர் ஜெயரட்ணம் 2005.04.20 அன்று நள்ளிரவு 12.00 மணிக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தல் மேலும் 20 மில்லியன் தேவை


### தேர்தல்கள் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு, வடமேல், மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலுக்கு 1500 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ள நிலையில் மேலதிகமாக இன்னமும் 20 மில்லியன் ரூபா தேவையெனத்

19 ஆம் பக்கம் பார்க்க

# கைத்தொழில் அபிவிருத்தி சபையால் குடாநாட்டில் பல்வேறு திட்டங்கள்



(யாழ்ப்பாணம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ்வாண்டு இவ் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 11 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப மற்றும் பயிற்சி வழங்கல், வியாபார முக்கியத்துவப் பயிற்சி வழங்கல், உற்பத்தி கிராம விருத்தியும் உருவாக்கமும், வாழ்வின் எழுச்சித் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் தொழில் நுட்ப மற்றும் வியாபார முகாமைத்துவப் பயிற்சி வழங்கல்கள், பயனாளிகளுக்கான மூலப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள் வழங்கல் என்பனவற்றிற்கென 11 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

## மரக்கறி வகைகளின் விலையில்வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி காணப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் மற்றும் சாவகச்சேரி மரக்கறி சந்தைகளில் மரக்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளது.

பயிற்றங்காய் 20 ரூபாவாகவும், கத்தரிக்காய் 30 ரூபாவாகவும், பூசணிக்காய் 30 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

இக்காலப்பகுதிகளில் மரக்கறிகளின்விலை எப்போதும் அதிகரித்தே காணப்படும். ஆனால் இம்முறை மாறாக மரக்கறிகளின் விலையில் பாரிய வீழ்ச்சி காணப்படுகிறது.

# பரீட்சையில் சித்திபெற வாழ்த்துகிறார் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

நாடெங்கிலும் நடைபெறும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 16 ஆயிரத்து 604 மாணவர்களுக்கென வடமாகாணக் கல்வி அமைச்சின் மாகாணக் கல்வித்திணைக்களம் பாடசாலை மட்டத்திலும் ஒருங்கிணைத்து கருத்தரங்கு, பயிற்சிகள் என்பன நடத்தி சிறந்த முறையில் மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்தியுள்ளனர்.

இப்பரீட்சையில் வடமாகாணத்திலிருந்து சிறந்த முறையில் அடைவு மட்டத்தைப் பெறுவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

மாணவர்கள் இப்பரீட்சையில் நிதானத்துடனும், துணிவுடனும் எதிர்கொண்டு வினாக்களுக்கு உரிய முறையில் விடையளித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

## யாழ்.பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

இப்பணிகள் 2015, மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிறைவு பெறும் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் 9 திட்டங்கள் 1.6 மில்லியன் ரூபாவிலும், வவுனியாவில் 3 திட்டங்கள் 651 மில்லியன் ரூபாவிலும், கிளிநொச்சியில் 2 திட்டங்கள் 2830 மில்லியன் ரூபாவிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் கிளிநொச்சியில் பொறியியல் பீடம் அமைப்பதற்கு 2,437 மில்லியன் ரூபாவிற்கான மதிப்பீடும், வவுனியாவில் விடுதி அமைப்பதற்கு 229 மில்லியன் ரூபாவுக்கான மதிப்பீடும், யாழ்ப்பாணத்தில் விடுதி அமைப்பதற்கு654 மில்லியன் ரூபாவிற்கும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## உல்லாசப்பயணிகளுக்கு அரியாலையில் கடற்கரை

(திருநெல்வேலி)

அரியாலைப்பகுதியில் உல்லாசப் பயணிகளுக்கான கடற்கரை ஒன்றை உருவாக்குவதற்கு நல்லூர் பிரதேச சபை முடிவு செய்துள்ளது.

இதற்காகப் பல ஏக்கர் விஸ்தீரனமுடைய காணியை நீண்ட காலக் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் 24 பரப்புக் காணி ஒன்றும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

அமைக்கப்படவுள்ள இவ் உல்லாசக்கடற்கரை, பயணிகளைக் கவர்ந்திருக்கும் வகையில் மிகவும் கவர்ச்சிகரமாகவும் அழகாகவும் உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் நல்லூர் பிரதேச சபையினால் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் சந்தையின் கிழக்குப் பகுதி இன்னும் ஒருமாத காலப்பகுதியில் திறந்துவைக்கப்படவுள்ளது. கீழ்ப்பகுதிவேலைகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. (137)

## வேட்பாளர்களுக்கு யாழில் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைத்தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான செயலமர்வு ஒன்று இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் அச்சுதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இம்முறை வடமாகாண சபைத்தேர்தலில் 380 வேட்பாளர்கள் பேரட்டியிடுகின்றனர். இவர்களுக்கான தேர்தல் தொடர்பான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 2 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளதுடன், இதில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தேர்தல் தொடர்பான அதிகாரிகள் உட்பட 400 இற்கும் அதிகமானோர் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இச்செயலமர்வில் வேட்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2449 திகதி 03-08-2013

ஆங்கில எழுத்து: P

வெற்றி எண்கள் 09 58 67 70

போனஸ் இல: 21

ஜக்பொட் பரிசு ரூ.19,364,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 249366 | 20/- | 4,987,320/- |
| 2 இல | 17828 | 100/- | 1,782,800/- |
| 3 இல | 381 | 1,000/- | 381,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9983 | 40/- | 399,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 719 | 1,000/- | 719,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,364,450/- | - |
| 1 இல + போனஸ் இல | 11802 | 100/- | 1,180,200/- |
| 2 இல + போனஸ் இல | 545 | 500/- | 272,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 531 | 200/- | 106,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 1 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 291195 | | 11,612,840/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 ஒகஸ்ட் 07 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 20,045,125/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/2973)


## தாளையம்பதியில் இரதோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவம் இன்று இடம் பெறுகிறது.

இன்று காலை .10 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறுவதோடு நண்பகல் அடியவர்களுக்கு அன்னதானமும் இடம்பெறும்.

மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய தர்மகத்தா அறிவித்துள்ளார்.. (இ)

## இலவச கட்டுமான பொருட்கள் திருத்த வேலைகளுக்காக பெறலாம்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் மற்றும் பொது மயானங்களுக்கான திருத்தவேலைகள், புனரமைப்பு போன்றவற்றுக்கான கட்டுமானப் பொருட்களை இலவசமாக வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை முன்வந்துள்ளது.

புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டு பூர்த்தியடையாமல் இருக்கும் மேற்படி அமைப்புக்களின் கட்டட வேலைகளை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வுதவிகளை வழங்குவதற்கு சபை தீர்மானித்துள்ளது.

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டைப் பெற்ற பின்னர் சபையின் வீடமைப்புக் குழுவின் சிபார்சினையும் பெற்ற அமைப்புக்களுக்குக் கட்டுமானப் பொருட்களை வழங்குவதற்கு நல்லூர் பிரதேச சபை முடிவு செய்துள்ளது.(137)

## விசேட கணனிப் பயிற்சி பாடசாலை ஆசிரியர்களுக்கு

வடமாகாண கல்வித்திணைக்களத்தில் ஆசிரியர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கணனிப்பயிற்சிநெறியில் ICDL கற்கைநெறி, 18 தினங்களும் IPICT கற்கைநெறி 16 தினங்களும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாணக் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

## சடலம் மீட்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கோணாவில்ப் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட சடலம் ஒன்று மாஞ்சோலை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வேலுசாந்தகுமார் (வயது - 34) என்பவரது சடலமே புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (125)

# முதலீட்டு வாய்ப்புக்கள் யாழ்.மாவட்டத்தில் அதிகரிப்பு

## மாவட்டச் செயலக புள்ளி விபரத்தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதலீட்டு வாய்ப்புக்கள் தற்காலத்தில் அதிகரித்துள்ளதாக யாழ்மாவட்டச செயலக புள்ளிவிபரத் தகவல்களை தெரிவித்துள்ளன.

இதன்படி மருதங்கேணி காரைநகர், நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் சுற்றுலாக் கைத்தொழிலுக்கான முதலீட்டு வாய்ப்புக்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மணற்காட்டு பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலை நிறுவுவதற்கும் சாவசகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் தும்புத்தொழிற்சாலை நிறுவுவதற்கும வாய்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றது.

மேலும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மண்டைதீவு கிராமத்தில் மீன் உணவு உற்பத்தி தொழிற்சாலை நிறுவுதலுக்கும சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அச்சுக்கள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவதற்கும் வாய்ப்புகள் காணப்படுகிறது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலிப் பகுதியில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள இயக்கச் செய்தல் ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் எழுவைதீவு பகுதியில் பனை உற்பத்திகளை மேம்படுத்தல் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலிப் பகுதியில் ஆடைத்தொழிற் சாலைகளை நிறுவுதல் வேலணை, சண்டிலிப் பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அலுமினிய தொழிற் சாலை நிறுவுதல் போனறவற்றுக்கு முதலீட்டு வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகிறது.

மேலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நல்லெண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுதல் சங்கானைப் பிரதேச செயலர் பிரவில் சீமெந்து கல் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவுதல் கரவெட்டி பிரதேச செயலர பிரிவில் வதிரிப் பகுதியில் தோல் உற்பத்திகளுக்கும் முதலீடு வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதாக யாழ்.மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ)

# ஆவரங்கால் முன்பள்ளியின் 39 ஆவது மழலைகள் விழா

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்திய முன் பள்ளியின் 39.ஆவது வருடாந்த மழலைகள் விழா முன்பள்ளி முன்றலின் முன் பள்ளித் தலைவர் கே.சிவசோதி தலைமையில் நடைபெற்றது.

புலம்பெயர்ந்து சுவிற்சிலாந்தில் வசிக்கும் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் ரீ.கமலநாதன் இலண்டனில் வசிக்கும் ஆவரங்கால் கிராம அபிவிருத்தி சங்க ஆரம்ப கால, தலைவர் கே.சின்னத்துரை (ஜே.பி) சூழலியலாளர் பி.ஐங்கரநேசன் வடக்கு மாகாண கல்வியமைச்சின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா, வலிகாம வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் உள்ளூராட்சி திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தவநாயகம், ஆவரங்கால் சிவ சக்தி மணி மண்டப இயக்குனர் சபை உறுப்பினர் திருமதி கணேஸ், வா.பத்மநாதன் ஆகியோர் இம்மழலைகள் விழாவிலே விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

மழலைகளின் விளையாட்டு நிகழ்வுகள், உடற்பயிற்சிகள் குழந்மைதகள் குதூகலம் வெளிநாட்டு உறவுகளின் சிறுவர் விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைத்து மழலைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. முன்பள்ளி செயலாளர் ஏ.தியாகராசா நன்றியுரை நிகழ்த்தினர். (01)

# புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி

(யாழ்.நிருபர்)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆகஸ்ட் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 28 ஆயிரத்து 614 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இந்த மாணவர்களின் பெயர் விபரங்கள் மற்றும் சுட்டெண் என்பன சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைகப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'காலை 9.30 மணிமுதல் 10.15 வரை முதல் வினாத்தாள் பரீட்சையும் 10.45 முதல் 12 மணிவரை இரண்டாவது வினாத்தாள் பரீட்சையும் நடைபெறும். (10)

# நல்லூர் பிரதேச சபையின் மக்களுக்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் பொதுமக்களுக்கான விசேட நடமாடும் சேவை நாளை மறுதினம் புதன் கிழமையும் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமையும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இதில் நாளை புதன்கிழமை மணியம் தோட்டத்தில் 6 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள முன்பள்ளியிலும் 14 ஆம் திகதி புதன்கிழமை கோண்டாவில் மத்திய சனசமூக நிலையத்தின் கேட்போர் கூடத்திலும் நடைபெறவுள்ளது.

மக்களை நோக்கி' எனும் செயற்றிட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையினால் முன்னெடுககப்படும் இவ் நடமாடும் சேவையின் மூலம் பல்வேறு சேவைகள் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

இதன்படி தற்போது குடியிருக்கும் காணி உரிமையாளரின் பெயர் சேவைவரிப் பதிவேட்டில் காணப்படவில்லையானால் சோலைவரியினை அவரது பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல், குடியிருக்கும் காணிக்குரிய சோலைவரி இலக்கத்தினைத் தெரியாதவர்கள் சோலைவரிப் பதிவேட்டில் பிரகாரம் அதனை அறிந்து கொள்வதுடன் அதற்குரித்தான சோலைவரிக் கட்டணத்தையும் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் சிமெந்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்தவொரு கட்டட வேலைகளுக்கும் பிரதேச சபை அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய சேவைகள் இடம்பெறவுள்ளன.

மேலும் சகல வியாபார நிலையங்கள் உள்ளூர் உற்பத்தியாளரின் விற்பனை, முகவர்களுக்கான வியாபார உரிமங்களைப் பெற்றுக்கொள்ளல், புத்தகக் காட்சிப்படுத்தல், இலவச ஆயுர்வேத சேவை என்பனவும் நடமாடும் சேவையில் இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவை யில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

# நடமாடும் மருத்துவ சேவை

கல்வி சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் மருத்துவ சேவையும் கண்காட்சியும் அண்மையில் முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதில் துணுக்காய் வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பல், கண் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் கல்வி சுகாதார அமைச்சின் பணிப்பாளர் ரேணுகா பீரிஸ், முல்லை மாவட்ட சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் திலீபன், மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி அரபாத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலினி ஆகியோர் கலந்து கொண்டனர். (40)

# சிறுவர் நல மேம்பாடு கிளிநொச்சியில் செயலமர்வு

(யாழ் நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தினால் சிறுவர்களின் உயரிய நலன்களை மேம்படுத்துதல் தொடர்பான செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவிச செயலாளர் திருமதி பரமோதயன ஜெயராணி தலைமையில் கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம சேவை அலுவலர்கள்,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சிறுவர், பெண்கள் நன்நடத்தை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.


மாவட்ட செயலக உளவளத் துணையாளர் தேவராஜா துஷ்யந்தன் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். (10)

# தேர்த்திருவிழா

அமிர்தகழி மாமாங்கேஸ்வர ஆலய தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆடிஅமாவாசை தினமான நாளை செவ்வாய்க்கிழமை நாண் பகல் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

மண்டூர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்து இருபது நாட்களுக்கு திருவிழா நடைபெறும். (10)




# ஆலய வாசலில் மிருகபலி ஏற்கலாமா?

ஆலயம் புனித இடம் நாங்கள் செய்யும் பாவங்கள் நேர்த்திகள் என்று காவடிகள் அர்ச்சனைகள் அங்கப்பிரதட்சனைகள்என்று எத்தனை புனித இடமாகிய இந்த ஆலயங்களில் நிறைவேற்றி எமது மனங்களை இறைவனிடம் செலுத்தி நிறைவேற்றி வருகின்றோம்.

தேவாரங்கள், பஜனைகள் என்று உருகி உருகி பாடி இறைவனிடம் மன்றாடுகின்றோம். எமக்கு துன்பங்கள் வரும்போது கடவுளே நீர்தான் காப்பாற்ற வேண்டும் உனைவிட எமக்கு யாருமே துணை இல்லை என்று மனம் நோகின்றோம். செம்மனச் செல்வியே மன்ம் நொந்த போது பிட்டுக்கு கூலியாக சிவபெருமான் மண் சுமந்த வரலாறுகள் ஒன்றல்ல பல உண்டு.

இப்படிப்பட்ட ஆலயங்களின் வாசலில் உயிர்பலி எடுப்பது ஏற்றுக்கொள்ளலாமா, எல்லா (இறைவன் படைத்த) உயிர்களிலும அன்பு, பாசம் கருணை வையுங்கள் என்ற அடை மொழியை நாம் படித்திருக்கின்றோம்.


அப்படிப்பட்ட புனித தலங்கள் அமைந்த சில ஆலயங்களில் தற்போதும் மிருகபலி எடுப்பது சரியா? இப்படி கட்டளையை இறைவன் இட்டாரா? இல்லையே மனிதர்களாகிய நாம் நினைத்தபடி மிருகங்களின் கழுத்தை வெட்டி நாசமறுக்கும் செயலை இனியாவது நிறுத்துங்கள். மனிதனின் கழுத்தை வெட்ட நீங்கள் சம்மதமா?, இப்படிப்பட்ட செயல்கள் பரம்பரை என்று சொல்லி தொடர விடாமல் இந்த பாவ வேலைகளை நிறுத்தலாமே இதற்கு கருத்துக் கூறும் பொறுப்பை உங்களிடம் விட்டு விடுகின்றேன்.

எதுசரி எதுபிழை என்பதை நீங்களே முடிவெடுங்கள்.

* * *

அடியவன் வரணி

# சுகாதாரமற்ற கழிவுவாய்க்கால் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்



(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தை வளாகத்தில் கழிவுநீர் போகும் வாய்க்கால் பகுதி சுகாதாரமற்ற முறையில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

கிடங்காகவுள்ள வாய்க்கால் பகுதியின் மூடி மூடப்படாமல் காணப்படுவதாலேயே இந் நிலை காணப்படுவதாகவும் இதனால் சந்தைக்கு வரும் நுகர்வோரும் வியாபாரிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் குடிநீர கிணறும் சுத்தமற்றதாக கிணறு மூடியும் மூடாமலும் காணப்படுவதாகவும் குடிநீரை பயன்படுத்துவோர் அச்சம் கொள்ளும் நிலை காணப்படுகிறது.

அதிகமான மக்கள் நடமாடும் சந்தைப்பகுதியில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய கரவெட்டி பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

ஆசைகளைத் திருப்திசெய்வதில் அமைதி இல்லை, மட்டுப்படுத்துவதில்தான் அமைதி உள்ளது. - ஹிபர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கஷ்டங்கள் உண்டுதான்; சாவுகளில்லை!

கடந்த வருடம் அமைதிக்கான நோபல் விருதை ஐரோப்பிய ஒன்றியத்திற்கென அறிவித்து, நோபல் பரிசுக் குழு தெரிவித்திருந்த காரணம், இன்றைய நம் சூழலில் நாமும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. போர்கள் நடக்கும் கண்டமாக இருந்த பிரதேசத்தை, அமைதி தவழும் பிராந்தியமாக மாற்றுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உதவியிருப்பதாக நோர்வேயைத் தலைமையகமாகக் கொண்ட நோபல் விருதுக் குழு தெரிவித்திருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளில் அநேகம் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன. வேலையின்மை, விலைவாசி பிரச்சினைகளால் நாடுகளுக்கு இடையே உறவுகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையில் ஐரோப்பா அமைதிப் பூங்காவாக விளங்க ஒன்றியம்தான் காரணம் என்று கூறி அமைதி விருது வழங்குவது பொருத்தமில்லாத நடவடிக்கை என்ற விமர்சனம் எழுந்தபோது, குழு அதற்குப் பதிலளித்திருந்தது.

'மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் சாகவில்லைதானே' என்று ஒரு மாணவி சொன்ன கருத்தைச் சுட்டிக்காட்டி, எல்லா நாடுகளும் யுத்த பூமியாக காட்சியளித்த காலத்தில் இருந்து மாறி வெறுமனே வாய்ச்சண்டை போடும் அளவுக்கு வந்திருப்பதே பெரிய மாற்றம்தான் என்று அது தெரிவித்திருந்தது. இதுவே விருது கொடுக்கப்பட வேண்டிய சமாதானச் சூழல் உருவாக்கம்தான் என்றார்கள்.

நமது நாட்டிலும் அப்படியான சூழ்நிலை இருப்பதால் அதிலுள்ள நியாயத்தை விளங்கிக்கொள்ள முடியும். யுத்தம் முடிந்திருக்கிறதே தவிர நமது பிரச்சினை இன்னும் தீரவில்லை; தீர்வு வந்துசேரவில்லை. மக்களின் கஷ்டங்கள் முற்றாகத் தீர்க்கப்படவில்லை. எதிர்காலம் குறித்த நம்பிக்கை உண்டாவதற்கு எவ்வளவோ செய்யப்பட வேண்டியிருக்கிறது. இந்தத் தீவின் சமூகங்களுக்கிடையிலான பகைத் தணிவும் இணக்கமும் ஏற்பட எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதவில்லை.

ஆனாலும், இப்போது யுத்தம் இல்லை. உயிரைக் கையில் பிடித்து ஓடும் அச்சம் இல்லை. குண்டுவீச்சுகள் இல்லை. அழிவுகள் இல்லை. அவலக் கதறல்கள் இல்லை. முன்னதோடு ஒப்பிடுகையில் இது பரிசுக்குரிய சூழல்தான். ஆனால் அழிவுகளில் அரசியல் சுயலாபம் ருசித்தவர்களுக்கு இதை ஒப்புக்கொள்ள முடிவதில்லை.

எனவே, இதை ஒரு முன்னேற்றப் படியாக எடுத்து, அடுத்தடுத்த படிகளுக்கு மேலேறிச் செல்வதை யோசிக்காமல், கடந்துபோன காலம்தான் பொற்காலம் என்று மக்களைப் பின்னுக்குத் தள்ளுவதிலேயே மும்முரமாயிருக்கிறார்கள். யுத்தம் முடிந்ததில் அதிருப்தி கொண்டவர்களாகவே அரசியல் செய்துகொண்டிருக்கிறார்கள். மக்கள் மேலும் மேலும் கஷ்டப்படுவதிலேயே அவர்களுக்குத் தங்களது பதவிகளுக்கான உணர்ச்சிகர மேடைகளைப் போட்டுக்கொள்ள முடிகிறது.

மக்களை கஷ்டங்களிலிருந்து விடுவித்து, நடைமுறைச் சாத்தியமான வழிகளில் அவர்களது வாழ்வை மேலெடுத்துச் செல்வதற்கான எந்த எத்தனங்களும் இவர்களிடமில்லை. மாறாக, எதுவும் நடைபெறாது என்பதைக் காட்டுவதற்காகவே தேர்தலில் போட்டியிடுவதாகச் சொல்கிறார்கள்.

மாற்றங்களை முன்னால் நின்று கைகுலுக்குவதன் மூலம்தான் அடுத்தடுத்த கட்டத்திற்கு அதை எடுத்துச்செல்ல முடியும்; நாம் விரும்பும் இறுதி இலக்கிற்குப் போகும் முயற்சியாகவும் அது இருக்கும். மாறாக, மாற்றங்களை பின்னால் நின்று இழுத்து கொண்டிருந்தால் அது மக்களை மேலும் தொல்லைகளுக்குள் தள்ளிவிட எத்தனிக்கும் அரசியல் உத்தியாகவே இருக்கும். அதைத்தான் த.தே.கூட்டமைப்பு இப்போதும் செய்துகொண்டிருக்கிறது; வடக்கு மாகாண சபையை வென்றாலும் அதையே செய்யும்.

- ஆசிரியர்

# அமைச்சரவையில் மறுசீரமைப்பு ஹக்கீமின் அமைச்சர் பதவிக்கு ஆப்பு

## "திவயின" பரபரப்புத்தகவல்

மாகாணசபைத்தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக சிங்கள வார இதழான 'திவயின' தகவல வெளியிட்டிருக்கின்றது. இந்த மாற்றத்தின்போது அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பதவிக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் அப பத்திரிகை ஆருடம் கூறியுள்ளது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் சிறுபான்மை கட்சித் தலைவர் ஒருவரின் அமைச்சுப் பதவி பறி போகலாம் என தெரிவித்துள்ளது. ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாகாணசபைத் தேர்தல்களின் நிறைவில் அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மாகாண சபைத் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஆளும கட்சியுடன் இணைந்து கொள்ள உள்ளதாகத் தெரிவித்துள்ளார். தேர்தலின் பின்னர் இவர்களுக்கு அமைச்சு அல்லது பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பிரித்தானிய படையினரின் கல்லறைகளை கண்டியிலிருந்து அகற்றுவதா? இல்லையா?

## கிளம்புகிறது புதிய சர்ச்சை

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகாமையில் அமைந்துள்ள பிரித்தானிய படை வீரரின் கல்லறையை அகற்றுவது தொடர்பில் விவாதங்கள் இடம் பெற்று வருவதாக கலாசார அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

1815ஆம் ஆண்டு அம்மை நோயத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த பிரித்தானிய படை வீரர்களின் 147 உடல்கள் இந்த மயான பூமியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மயான பூமி பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டிற்காக இலங்கை வரும் பிரித்தானிய இளவரசர் சாள்ஸ், இந்த மயான பூமிக்கும் விஜயம் செய்வார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையிலேயே, இந்த கல்லறைகளை அகற்றுவதா இல்லையா என்பது குறித்து விவாதங்கள் இடம் பெற்று வருவதாக கலாசார அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

# காணி அதிகாரங்கள் குறித்து உரிய தருணத்தில் பேசுவோம்

## தடம் மாறுகிறார் சம்பந்தன்

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து ஜனாதி பதியுடன் பேசுவதற்கு சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது அது குறித்து அவருடன் தான் பேச விருப்பதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கருத்துக்கு உரிய நேரத்தில் பதிலளிக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். அண்மையில் ஊடகப் பிரதானிகளுடன் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். காணி பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கருத்து ஏமாற்றமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். காணி பொலிஸ் அதிகாரங்களை பகிர்வது தொடர்பிலான ஜனாதிபதியின் நிலைப்பாடு நேரத்திற்கு நேரம் மாற்றமடைவதாக சம்பந்தன் குற்றம் சுமத்தியுள்ளார். ஜனாதிபதி உறுதியான நிலைப்பாட்டை பின்பற்றத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் கருத்துக்கு உரிய நேரத்தில் சரியான பதில் வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேசியப் பிரச்சினையை தீர்க்க எம்மால் மட்டுமே முடியும்

## இது ஜே.வி.பி.யின் அறிவிப்பு

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தம்மிடமே இருப்பதாக ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடைய சமூக, பொருளாதார, அரசியல் என சகல பிரச்சினைகளையும் அறிந்து அந்தப் பிரச்சினைகளுக்குத் தான் தீர்வு காணவேண்டும். இதுவரை ஆட்சியில் இருந்த எவருக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை. இதனால் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எங்களிடம் இருக்கின்றது என நாங்கள் கூறுகிறோம்.

இதன் முதல் கட்டமாக சமவுரிமையின்மை நிறுவனமயப் படுத்தப்பட்ட மற்றும் தேசியமயப்படுத்தப்பட்ட இடங்களில் சமவுரிமைகளை கொண்டு வர வேண்டும். இதனை ஜே.வி.பியை தவிர வேறு எந்தக் கட்சிக்கும் செய்யமுடியாது. சிலர் சமவுரிமையை இல்லாமல் செய்தனர். ஆனால் அதனை அவர்கள் செய்தனர் என்பதை ஏற்று கொள்வதில்லை என சோமவன்ஸ மேலும் குறிப்பிட்டார்.

# மீளப்பெற உத்தரவு

நியூஸிலாந்தின் பாரிய பால் உற்பத்தி நிறுவனமான "பொன்டேரா" உலகளாவிய தமது முகவர்களுக்கு அவசர அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. இதன்படி தமது பால் உற்பத்திகளில் கலந்திருப்பதாகக் கூறப்படும் பக்றீரியாக்கள், காலம் செல்லும் போது நச்சுத்தன்மை அடையும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பல நோய்களுக்கு வித்திடக்கூடும் என்றும் அச்சம் வெளி யிடப்பட்டுள்ளது.எனவே பால்மாக்களில் பக்றீரியா தொடர்பான உண்மை பரிசோதனைகளின் போது தெரியவந்தால் உற்பத்திப் பொருட்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு பொன்டேரா தமது முகவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. பொன்டேராவுக்கு உலகளாவிய ரீதியில் இலங்கை உட்பட்ட 8 நாடுகளில் முகவர்கள் செயற்படுகின்றனர்.

இதேவேளை நியூஸிலாந்தின் வர்த்தகத்துறை அமைச்சர் டிம் குரோசர் பால் உற்பத்திகள் குறித்து உலக சுகாதார நிறுவனம் உட்பட்ட அதிகாரிகளுக்கு அவசர அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

# பாடசாலைத் தோட்டம் விசேட போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் பாடசாலைத் தோட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இப்பாடசாலைத் தோட்டப் போட்டியில் நிலப்பயன்பாடு, பயிர்வகை, இயற்கையுடன் இணைந்த பராமரிப்புமுறை என்பன மதிப்பிடப்பட்டு சிறந்த பாடசாலைத் தோட்டம் தெரிவு செய்யப்படவுள்ளது.

இப்போட்டியின் வலய மட்டத்தெரிவு எதிர்வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளதாகவும் இப் போட்டிக்கு ஏற்றவகையில் பாடசாலைத் தோட்டங்களை தயார் செய்யுமாறும் வலயக்கல்வி அலுவலகத்தால் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(10)



# விஞ்ஞான வளர்ச்சியின் வளர்ச்சி

## ரவி நடராஜன்

"ஒரு குத்துமதிப்பாக 3 இலட்சம் வாகனங்கள், 8 மணி நேரத்திற்குள் நாளொன்றுக்கு இந்த சந்திப்பைக் கடக்கின்றன. இது வெறும் குத்து மதிப்புதான். இதில் ஒன்றும் பெரிய விஞ்ஞானம் இல்லை" - இப்படிப்பட்ட வாக்கியங்களைச் சாதாரணமாக இன்று கேட்கிறோம். தோராயமாக மதிப்பிடுதல், விஞ்ஞானத்திற்கு ஒத்து வராது என்பது சாமானியருக்கும் புரி-கிறது.

"அந்தப் பத்து நிமிடங்களில், எந்த விஷயம், எப்படி நடந்தது, அவற்றின் வரிசை என்ன என்று துல்லியமாக தெரியாது. அவ்வளவு சரியாக எல்லாவற்றையும் சொல்ல நான் என்ன விஞ்ஞானியா?" - இதையும் சாதாரண வாழ்க்கையில் நாம், பல நேரங்களில் கேட்கிறோம். இரண்டு விஷயங்களை, அவற்றைக் குறித்த முழுக் கவனம் இல்லாமலே, நாம் இத்தகைய குறிப்புகளில் பதிவு செய்கிறோம் - துல்லியமாக அளக்க சரியான விஞ்ஞானப் பயிற்சி தேவை, மற்றும் அளவிடலைச் சரியாக விளக்கவும் விஞ்ஞான அறிவு/பயிற்சி தேவை.

"கேள்வி மேல் கேள்வி கேட்டால் என்னிடம் என்ன பெரிய theory–M இருக்கிறது? எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். அதற்கு மேல் சொல்ல, நான் ஒன்றும் பெரிய ஐன்ஸ்டீன் இல்லை" - இதுவும், சில எரிச்சலான நேரங்களில் நாம் உபயோகப்படுத்தும் சாதாரண வாக்கியம். முரண்பாடில்லாமல், எத்தனை கேள்வி கேட்டாலும், சரியாக ஒரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பதிலளிப்பது என்பது விஞ்ஞானப் பயிற்சியிருந்தாலே சாத்தியம் என நினைக்கிறோம்.

பல தருணங்களில், நாம் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும், வித்தியாசம் பார்க்காமல், குழப்பிக் கொள்கிறோம். பெரும்பாலும், தொழில்நுட்ப வளர்ச்சியை, விஞ்ஞான வளர்ச்சி என்று வியக்கிறோம். உதாரணமாக, செல்பேசிகளின் புதிய அம்சங்களை விஞ்ஞான வளர்ச்சி என்று குழப்புகிறோம்.

சாதாரண மனிதர்கள் வியக்கும் (குழப்பும்) அளவிற்கு வளர்ந்துள்ள விஞ்ஞானம், எப்படி இந்நிலையை அடைந்தது என்பதை ஆராய்வது சுவாரசியமான விஷயம். கடந்த 500 வருடங்களில் மனித சிந்தனை எப்படியெல்லாம் மாறி இருக்கிறது என்பதை நினைத்தால் மிகவும் பிரமிப்பான விஷயம். ஏறக்குறைய 200,000 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மனிதரிடையே, கடந்த 500 வருடங்களில் ஏற்பட்ட சிந்தனை மாற்றம் என்பது எத்தனை பிரமிப்பானதாக நமக்குத் தோன்றினாலும் ஒப்பீட்டில் அது மிகச் சிறிய மாறுதலே. பூமியின் ஆயுட் காலத்தில் இந்த 500 வருடங்கள் நம் தனிவாழ்வில் ஒரு நிமிடத்தை ஒத்தவை. இப்படி ஒரு சிறுகாலத்தின் மாறுதல் எப்படி நம் கவனத்தில் அத்தனை பெரும் இடத்தைப் பிடித்தது என்பதை நாம் யோசிக்கலாம்.

> பல தருணங்களில், நாம் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும், வித்தியாசம் பார்க்காமல், குழப்பிக் கொள்கிறோம். பெரும்பாலும், தொழில்நுட்ப வளர்ச்சியை, விஞ்ஞான வளர்ச்சி என்று வியக்கிறோம். உதாரணமாக, செல்பேசிகளின் புதிய அம்சங்களை விஞ்ஞான வளர்ச்சி என்று குழப்புகிறோம்.

ஆரம்பத்தில், விஞ்ஞானி என்ற சொல்லே கிடையாது. இதுபோன்ற விஷயங்களில் ஈடுபாடு கொண்டவர்களைத் தத்துவவியலாளர் (philosopher) என்றே சொல்லி வந்தனர். ஏன், பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நியூட்டன் ஒரு தத்துவவியலாளராகவே கருதப்பட்டார். இன்று, நாம் அவரை பௌதிக விஞ்ஞானி என்றே அனேகமாக அறிகிறோம். அவரென்னவோ பலகலை விற்பன்னராகவே இருந்திருக்கிறார்.

நியூட்டன் மற்றும் கலிலியோ, 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டு காலங்களில் வாழ்ந்த தத்துவ ஆராய்ச்சியாளர்கள். ஆரம்ப காலத்தில் லத்தீன் மொழிதான் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் அதிகமாக உபயோகித்த மொழி. இன்றைய ஆங்கிலம் மிகவும் 16/17ஆம் நூற்றாண்டில் வளர்ந்திருந்தாலும் அவ்வளவாக உபயோகப் படுத்தப்படவில்லை. உதாரணத்திற்கு, நியூட்டன் ஒரு ஆங்கிலேயர் அன்றைய தொடக்க நிலை விஞ்ஞானத்தின் மேல் கொண்ட ஆர்வத்தால், லத்தீன் (Latin) மொழியை முழுமையாகக் கற்றுக் கொண்டார். அவருடைய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் கணக்குகள், லத்தீன் மொழியிலேயே இருந்தன. ஆங்கிலம் படித்தால்தான் விஞ்ஞானம் கற்க முடியும் என்று சொல்பவர்களுக்கு, நியூட்டனின் வாழ்க்கை பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை!

அதே நேரம் அன்று லத்தீன் மேலைச் சிந்தனைத் துறைகள் எல்லாவற்றுக்கும் பொது மொழியாக விளங்கியது. பன்மொழிக் கூட்டமாக அன்றும் இன்றும் விளங்கும் ஐரோப்பியர் நடுவேயும், ஓரளவு பல கண்டங்களிடையேயும் அறிவுத்துறைகளில் கல்வி கற்கவும், ஆய்வுகள் நடத்திக் கிட்டிய முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளவும், பொதுவாக சிந்தனைப் பரிமாற்றத்துக்கொரு நல்ல பாதையாகவும் லத்தீன் விளங்கியது. இதற்கு இன்னொரு காரணம் ஐரோப்பிய வரலாற்றுப் பாதை. ரோம சாம்ராஜ்யத்தின் அரசு மொழியாக, ஆட்சி மொழியாக, தவிர அரசால் போதிக்கப்பட்ட பல கலைகளின் புழங்கு மொழியாக லத்தீன் விளங்கியதோடு நில்லாமல், அன்று மேலை உலகில் பெரும் சக்தியாக இயங்கிய ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தின் புழங்கு மொழியாகவும் இருந்தது.

> நியூட்டன் ஒரு ஆங்கிலேயர் அன்றைய தொடக்க நிலை விஞ்ஞானத்தின் மேல் கொண்ட ஆர்வத்தால், லத்தீன் (Latin) மொழியை முழுமை யாகக் கற்றுக் கொண்டார். அவருடைய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் கணக்குகள், லத்தீன் மொழியிலேயே இருந்தன. ஆங்கிலம் படித்தால்தான்விஞ்ஞானம் கற்க முடியும் என்று சொல்பவர்களுக்கு, நியூட்டனின் வாழ்க்கை பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை!

அன்று அரசுகளிலும், அரசியலிலும், சமூகங்களைக் கட்டுப்படுத்துவதிலும், மக்களிடையே நிலவிய மத நம்பிக்கைகளை ஒழுங்குக்குள் வைப்பதிலும் லத்தீன் மொழியே மைய மொழி, ஏனெனில் கத்தோலிக்க மத அமைப்பு பன்னாடுகளிலும் ஆட்சி மதமாக விளங்கியது.

இதே காரணங்கள் இன்றைய ஆங்கில மொழிக்கு இல்லை என்றாலும், சில காலம் முன்பு வரை உலகில் பெரும் சாம்ராஜ்ய சக்தியாக விளங்கியது பிரிட்டிஷ் ஆட்சி. பல கண்டங்களில் பல நாடுகளை ஆண்ட பிரிட்டிஷ் அரசின் ஆட்சி மொழி ஆங்கிலம். இன்று உலகின் பெரும் சந்தை மொழியாகவும், ஆய்வுத்துறைகளுக்குப்புழங்கு மொழியாகவும், ஊடகங்களில் பெரும் பகுதியை ஆளும் மொழியாகவும், விளங்கும் ஆங்கிலம் உலகின் பெரும் சக்தியான அமெரிக்காவின் ஆட்சி மொழியும் கூட. தவிர உலக கல்வித் தளத்திலும், ஆய்வுத் தளத்திலும் அமெரிக்கப் பல்கலைகள் பிரதான இடத்தில் இருப்பதாலும் ஆங்கிலம் அறிவுத் துறைகளில் முக்கிய மொழியாக நிலவுகிறது. அந்த அளவில் அன்றைய லத்தீன் இருந்த இடத்தில் இன்று ஆங்கிலம் உள்ளது. என்றாலும் லத்தீன் மொழியை ஆங்கிலம் பிடித்துக் கொண்டதைப் போல இன்று வேறெந்த மொழியும் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடித்துக் கொள்ள தற்போதைக்கு வழியில்லை. ஆனால் பல நாடுகளின் பொருளாதார சக்தி கூடி அந்நாடுகள் மேலெழுந்து, கல்வி/சிந்தனைத் துறையிலும் அந்நாடுகளின் பங்கு கூடும்போது அம்மொழிகள் மேலெழுந்து ஆய்வுத் துறைகளில் மாற்றுப் புழங்கு மொழியாகும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

தொடக்க கால நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் வளர வணிகம் முக்கிய காரணமானது. அரசாங்கத்தின் பங்கு அவ்வளவாக இல்லை. 19ஆம் நூற்றாண்டில், "விஞ்ஞானி" (scientist) என்ற சொல் புழக்கத்திற்கு வந்தது. இவர்கள் வெறும் கோட்பாட்டு விளக்கங்கள் கொண்ட நூல்கள் எழுதுவதுடன் நிற்காமல், பலவகைப் பரிசோதனை முறைகள் (experimental methods) மற்றும் பயன்பாடுகளில் வெற்றி கண்டதால், "தத்துவவியலாளர்கள்" என்ற பட்டம் விலகத் தொடங்கியது. (இன்றுகூட, பல்கலைக்கழகங்களில், விஞ்ஞானத் துறைகளில் மிக உயர்ந்த பட்டம், Doctor of Philosophy, அல்லது PhD, என்றிருப்பது பழைய வழக்கத்தின் எச்சமே.)

இத்துடன் விஞ்ஞானிகளைப் பற்றிய சில எதிர்பார்ப்புகளும் வளரத் தொடங்கின. இந்த எதிர்பார்ப்புகளே இன்றும் பொது மக்களிடம் பரவலான கருத்துகளாகத் தொடர்கின்றன. அவை:

1. விஞ்ஞானம் சமூகத்திற்கு தேவையான ஒரு கண்டுபிடிப்பை உருவாக்க வேண்டும்.

2. எந்த ஒரு நிகழ்வையும் சரித்திரத்தில் முதன்முறையாகத் துல்லியமாக கணிக்க வேண்டும்.

3. வெறும் சிந்தனையோடு நில்லாமல், ஏதோ ஒரு பொருளை உருவாக்க வேண்டும்.

4. எந்த ஒரு கண்டுபிடிப்பும் பல்வேறு புதிய உபயோகங்களையும் உருவாக்க வேண்டும்.

5. விஞ்ஞானிகள் ஒரு மந்திரக்காரர் போல (magician) எல்லோரையும் திகைக்க வைக்க வேண்டும்.

இன்றும் ஒரு அமெரிக்கருக்கு எடிசனைத் (Thomas Alva Edison) தெரியும் ஆனால் /பைன்மேனைத் (Richard Feynman) தெரியாது. எடிசன் எல்லோருக்கும் தேவையான மின்குமிழ் (electric bulb) மற்றும் மின் உற்பத்தி போன்ற விஷயங்களில் ஈடுபட்டவர். ஆனால், ∴பைன்மேன் அப்படி ஒன்றும் சாதாரண வாழ்க்கைக்கு உபயோகமான பொருளை உருவாக்கவில்லை. இன்றுவரை, விஞ்ஞானி (scientist), மற்றும் கண்டுபிடிப்பாளர் (inventor) என இருவேறாகப் பிரித்துப் பார்ப்பது பொது அறிவாக எழவில்லை. இது 19ஆம் நூற்றாண்டின் தாக்கம் என்றே சொல்லலாம்.


பல வருடங்களாக, கண்ணுக்கு தெரிந்த விஷயங்களில் மட்டுமே விஞ்ஞானம் வளர்ந்து வந்தது. விஞ்ஞானச் சிந்தனைகள் மாறிவிட்டாலும், இன்று வரை, பொதுமக்களால், கண்ணுக்குத் தெரிந்த விஷயத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இங்கிலாந்தில் நடந்த முதல் தொழில் புரட்சி, நியூட்டனின் கோட்பாடுகளை அன்றாடம் பயன்படுத்தக் கூடிய பொருள்களாக மக்களுக்கு அளித்தது. இன்றைய இணையம், இவ்வகை இடைவெளியைக் குறைப்பதில் நல்ல சேவையாற்றியுள்ளது.

இன்று விஞ்ஞானத்தில் எந்த ஒரு கோட்பாடும் சரியான, துல்லியமான கண்காணிப்பினால் நிறுவப்பட வேண்டும் என்று சர்வ சாதாரணமாக ஒப்புக் கொள்கிறோம். ஆனால், கருத்து வேறுபாடுகளில், நம்பிக்கை வேறு-பாடுகளில் தொடங்கிய விஷயமிது என்பதை மறக்கக் கூடாது. விஞ்ஞானிகள் கருத்துப் பரிமாற்றம் செய்ய எளிதாக இருக்க வேண்டும் என்று உருவான ஒரு கருவியே இணையம். மூடு மந்திரத்திலிருந்து இணையம் வரை எப்படி இந்த மாற்றம் பரவியுள்ளது என்று விரிவாக மற்றொரு கட்டுரையில் பார்க்கலாம்.



# வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலை

## வடக்கு அபிவிருத்திக்கு கட்டியம்



(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் போருக்குப் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுத் தொழிற்சாலை ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திறந்து வைத்திருக் கின்றார்.

வவுனியாவில் 150 மில்லியன் டொலர் செலவில் இந்த ஆடைத்தொழிற்சாலை இத்தாலி நாட்டு நிறுவனம் ஒன்றின் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியா நகரில் இருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் நிறுவப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலையில் ஆரம்பத்தில் 250 யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிட்டியிருக்கின்றது.

நாளடைவில் இங்கு மூவாயிரம் பேர் வரையிலான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்திச் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

அபிவிருத்தியின் மூலம் நிலையான சமாதானத்தை அடைய முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன, மத, குல பேதங்களைக் கைவிட்டு அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும் என்றதுடன், பிரிவினை வாதத்திற்கு இடமளிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்கனவே பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அபிவிருத்திப் பணிகளுக்கென மேலும் நிதி செலவிடப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த வைபவத்தில் இலங்கைக்கான இத்தாலிய நாட்டு தூதுவர், அமைச்சர்களான டகளஸ் தேவானந்தா, ரிசாட் பதியுதீன் மற்றும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, திஸ்ஸ கரலியத்த மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட பலரும் கலந்து கொண டனர்.

# கடவுச்சீட்டு மோசடி செய்த இலங்கையர் மூவர் சென்னையில் கைது

(கொழும்பு)

போலி கடவுச்சீட்டு மூலம் கொழும்பு வர முயன்ற ஐவர் சென்னை குடியுரிமைத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்னையில் இருந்து கொழும்பு செல்லும் விமானம் கடந்த வெற்றி இரவு 11:55 மணிக்கு புறப்பட தயாராக இருந்தது.

இந்த விமான பயணிகளின் கடவுச்சீட்டுக்களை குடியுரிமைத் துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது இலங்கையைச் சேர்ந்த செந்திவரன் 32, நாகராஜ் 73 மற்றும் மதிவதனா 53 ஆகியோர் போலி விசா வைத்திருந்தது தெரிய வந்தது. இந்நிலையில் மூவரும் கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை பங்களாதேஷைச் சேர்ந்த முகமது குலாம் ரபானி 27, முகமது முரோல் அப்தின் 32, ஆகியோர் நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு ஏர்-இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் மூலம் கொழும்பு வர சென்னை விமான நிலையம் வந்தனர். இருவரின் கடவுச்சீட்டுக்களும் போலி என்பது விசாரணையில் தெரிய வந்தது. இருவரும் கைது செய்யப்பட்டு, விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# மக்களின் ஆணைக்கு துரோகம் செய்ய நான் எப்போதும் தயாராக இல்லை

## சஜித் பிரேமதாஜ தெரிவிப்பு



மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு துரோகம் செய்ய நான் தயாராக இல்லை. எனவே அரசு பக்கம் சாயும் எண்ணம் எதுவும் என்னிடம் இல்லை என்று சஜித்பிரேமதாசா தெரிவித்தார்.

கட்சியின் மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அரசாங்கத்தில் இணைந்து கொள்ள உள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டே உரிமைகளுக்காக குரல் கொடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். மக்களினால் வழங்கப்பட்ட ஆணைக்கு அனைத்து அரசியல் வாதிகளும் அடிபணிந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் ஆணைக்கு துரோகம் இழைப்பது ஜனநாயக பொறிமுறையின் மிகப் பெரிய பாவச் செயலாக தாம் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் சிலர் கட்சி தாவ உள்ளதாக வெளியாகும் தகவல்கள் பற்றி உறுதியாக கூற முடியாது எனவும், சில வேளைகளில் அவ்வாறு நடக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜே.வி.பி.க்கு புதிய தலைமை ரில்வின் சில்வாவுக்கு வாய்ப்பு



(கொழும்பு )

ஜே.வி.பி. கட்சிக்கு புதிய தலைவர் ஒருவர் நிகமிக்கப்படவிருக்கிறார்.

இப்பதவிக்கு பொருத்தமானவர் யார் என்பது குறித்து இன்னமும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. அநேகமாக ரில்வின் சில்வாவுக்கு இந்த வாய்ப்பு கிடைப்பதற்கு அதிக சாத்தியக் கூறுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய தலைவர் ஒருவரை அறிவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

வயதுக்கு ஏற்றவாறு கட்சி எனக்கான பொறுப்புக்களை வழங்கும். கியூபத் தலைவர் பிடெல் கஸ்ட்ரோ ஜனாதிபதி மற்றும் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகி, தன்னால் முடிந்த பொறுப்புக்களை மட்டும் மேற்கொண்டு வருகின்றார்.

கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவா? அல்லது வேறு ஒருவரா என்பது கட்சி பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# மாகாணசபைத் தேர்தலுக்கு ஆயிரத்து ஐநூறு மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு )

இம்முறை மாகாணசபைத் தேர்தலுக்காக பாரியளவில் செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தலுக்காக ஆயிரத்து ஐநூறு மில்லியன் ரூபா செலவிடப்பட உள்ள தாக தேர்தல் செயலகம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துவதற்கு மேலும் 20 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல்களை கண்காணிப்பதற்கு 11 சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஏ.எல்.ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச கண்காணிப்பாளர்களாக யாரை நியமிப்பது என்பது குறித்து எதிர்வரும் வாரத்தில் தீர்மானிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று மாகாணசபைகளுக்காகவும் 131 அரசியல் கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளன, இவற்றில் 126 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், சுயாதீன குழுக்கள் 79 வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன, இதில் 75 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்று மாகாணங்களிலும் மொத்தமாக 2279 அரசியல் கட்சி வேட்பாளர்களும், 1506 சுயாதீன குழு வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

# மாத்தள விமான நிலையம் இனி பழுது பார்க்கும் நிலையம்

## எதிர்பார்த்தது நடக்கவில்லை

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தில் எதிர்பார்த்த விமானப் பயணங்கள் இடம்பெறாத நிலையில் அது விமானங்களை பழுதுபார்க்கும் இடமாக பயன்படுத்தப்படவுள்ளது

விமானசேவைத் துறை பணிப்பாளர் பிரசன்ன விக்கிரமசூரியவின் தகவல்படி இலங்கையின் விமானங்கள் மட்டுமன்றி வெளிநாடுகளின் விமானங்களும் மத்தளை விமான நிலையத்தில் வைத்து பழுது பார்க்கப்படவுள்ளன.

இந்த திட்டம் 209 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனினும் இந்த திட்டத்துக்கு முதலீடு செய்ய இன்னும் வெளிநாட்டு நிறுவனங்கள் எவையும் முன்வரவில்லை.

எனவே அதனை தாம் எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதாக விக்கிரமசூரிய தெரிவித்தார்.

# மொனராகலையில் மீண்டும் காட்டுத்தீ

(கொழும்பு)

மொனராகலையில் மீண்டும் தீ பரவியுள்ளது. இதற்கு முன்னர் தீ ஏற்பட்ட பிரதேசத்திற்கு எதிர் திசையில் உள்ள பகுதிகளில் இத்தீ பரவியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மொனராகலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரவிந்திர குமார தெரிவித்தார்.

தீயை கட்டுப்படுத்த அப்பிரதேசத்திற்குச் செல்ல முடியாதுள்ள தென அவர் குறிப்பிட்டார். கடந்த வெள்ளிக்கிழமை தெஹெல் லெஹெல மலை பகுதியில் ஏற்பட்ட தீயினால் 150 ஏக்கர் எரிந்து சாம்பலானமை குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகாவின் ஒளிப்படம் மாயம் தளபதிகள் பட்டியலிலும் பெயர் நீக்கம்



இராணுவத் தலைமையகத்தில் வைக்கப்பட்டிருந்த சரத் பொன்சேகாவின் ஒளிப்படம் அங்கிருந்து அகற்றப் பட்டிருக்கிறது. இராணுவத் தளபதிகள் வரிசையிலிருந்து சரத் பொன்சேகா நீக்கப்பட்டுள்ளார். அதனடிப்படையில் இராணுவத் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதிகளின் நிழல்பட வரிசையில் இருந்து சரத் பொன்சேகாவின் படம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இலங்கையின் 20 ஆவது இராணு வத் தளபதியாகப் பொறுப்பேற்ற லெப். ஜெனரல் தயா ரத்னாயக்க, பதவியை விட்டு விலகிச் சென்ற இராணு வத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவின் ஒளிப்படத்தை திறந்து வைத்தார். ஆனால், அதற்கு முன்னால் இருக்க வேண்டிய, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் படம் அங்கு இருக்கவில்லை.

சரத் பொன்சேகாவின் படம் இருந்த இடத்திலேயே ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவின் படம் வைக்கப்பட்டிருந்தது. அதேவேளை, 2009 ஜூலையில் இலங்கை இராணுவத் தளபதியாக பதவியேற்ற போது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் படத்தை திறந்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# என்றும் தளராத கல்விச்சேவை

## சமச்சீரான வளப்பங்கீடு

### சந்திரகுமார் எம்.பிக்கு பாராட்டு



கிளிநொச்சியின் கல்விச் செயற்பாட்டில் பாரபட்சமற்ற எல்லோருக்கும் சமமான கல்விச் செயற்பாட்டினை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் என கிளிநொச்சி கல்வி வலய ஆரம்ப பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்ற லிட்டில் எயிட் நிறுவனத்தின் அனுசரணையில் தரம் ஒன்றைச் சேர்ந்த எண்பது மாணவர்களுக்கு காலணிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச்செயற்பாட்டில் பின்தங்கிய மற்றும் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வளங்களை ஏற்றத்தாழ்வுகள் அற்ற முறையில் பங்கீடு செய்து கிராமங்களையும் கல்விசெயற்பாட்டில் முன்னிலைக்கு கொண்டுவர காரணகர்த்தவாக விளங்குகின்றவராக நாடாளுமன்ற உறுப்பினர் காணப்படுகின்றார்.

கடந்தாண்டு கிளிநொச்சி மாவட்டம் கல்வி வளர்ச்சி வீதத்தில் தேசிய மட்டத்தில் முதல் நிலையை பெற்றமைக்கு இவரின் செயற்பாடுகள் பிரதான காரணம் மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் மூலம் யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியரை கொண்டு தயாரிக்கப்பட்ட புலமைபரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதாந்தப் பரீட்சைகளையும் நடாத்தி வருகின்றார்.

இவ்வாறு இந்த மாவட்டத்தின் கல்வித்துறையின் மேம்பாட்டிற்கு சந்திரகுமார் எம்.பி.யின் பணிகள் ஒருமகத்தான பணிகளாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டம் கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி முதன்மை மாவ ட்டமாக மாறும் எனவும் குறிப்பிட்டார்.

பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்,லிட்டில் எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகளான ஷீலா மற்றும் சாளி, நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜோசப் விதானகே, ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# மடு உற்சவத்தை முன்னிட்டு

## விசேட ரயில் சேவை ஆரம்பம்

(யாழ்நிருபர்)

மடுமாதா ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 12ஆம் திகதி விசேட ரயில்சேவைகளை புகையிரத திணைக்களம் ஆரம்பிக்கின்றது. கொழும்பு, நீர்கொழும்பு, மொரட்டுவ, அளுத்கம ஆகிய இடங்களிலிருந்து விசேட ரயில் சேவைகள் நடைபெறுமென ரயில்வே போக்குவரத்து திணைக்கள அதிபர் எல்.ர.ஆர்.ரத்ணாயக்க தெரிவித்துள்ளார்.

மடு செல்லும் யாத்திரிகர்கள் திரும்பி வரவும் விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளன. இதற்கு மேலதிகமாக எஸ் 8 ரக பவர் செட் ரயில் ஒன்று எதிர்வரும் 13ஆம் திகதியில் இருந்து 16ஆம் திகதி வரை மதவாச்சியிலிருந்து மடு ரோட் சேவையில் ஈடுபடுத்தப் படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (10)

# மீனாட்சி அம்மனுக்கு ருதுசாந்தி விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம் பதியுறை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்புர ருதுசாந்தி விழா எதிர்வரும் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் காலை 9.30 மணிக்கு அபிஷேகம்,10.30 மணிக்கு விசேட பூசை வழிபாடு, 11மணிக்கு ருதுசாந்தி விழா, என்பன இடம்பெறவுள்ளது. இரவு 7மணிக்கு விசேட அலங்காரத்துடன் அம்பாள் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை 16ஆம் திகதி காலை 9மணிக்கு வரலட்சுமி விரதபூசை சிறப்புற நடைபெறவுள்ளது. விரத நூல் பெறும் அடியவர்கள் ஆலயத்தில் முன்னதாகவே பெயரை பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் உற்சவக் கிரியைகளை பண்டிதர் கலாநிதி து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆற்றவுள்ளார்.

# நோன்பு பெருநாளை தீர்மானிக்கும் மாநாடு

(யாழ்ப்பாணம்)

நோன்புப் பெருநாளை தீர்மானிக்கும் மாநாடு நாளை மறுதினம் புதன்கிழமை மாலை ம.்.ரிப் தொழுகையின் பின்னர் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவிருக்கின்றது.

இம்மாநாட்டில் உலகமக்கள் ,கதீப்மார்கள்,ஜிம்மா பள்ளிவாசல் நிர்வாகிகள் அகிலஇலங்கை ஜம்இய்யத்துல் உலமா,முஸ்லிம் சமய கலாசார திணைக்களம், ஷரிஆ கவுன்சில் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறையை கண்டவுடன் பெருநாள் தீர்மானிக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலாவது ஷ்வ்வாத மாத தென்பட்டால் தகுந்த ஆதாரத்துடன் கீழ் காணும் தொலைபேசி மூலம் தெரியப் படுத்தலாம். 0777366099, 0115234044, 0112390783 யாழ். உலமா சபையினரும் தலைப் பிறை பார்க்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள். (105)

# ஈழத்துக்கலைஞருக்கு இந்திய விருது




ஈழத்து ஆன்மீக எழுத்தாளரும் வில்லிசை கலைஞருமான இராசையா ஸ்ரீதரனுக்கு தமிழ் நாட்டில் தெய்வத்தமிழ்ச்சுடர் எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

'திருக்கோயில்கள் வளர்த்த தெய்வத்தமிழ் அனைத்துலக 11ஆவது ஆய்வு மாநாடு தமிழ் நாடு' பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போதே அவருக்கு இவ் விருது வழங்கப் பட்டது.

இம்மாநாட்டில் ஈழத்துத் திருக்கோயில்களில் 'தெய்வத் தமிழ் கலையாம் வில்லிசைக் கலை' என்னும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தமைக்காகவே இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

# ரம்ழான் நற்சிந்தனை



ஐந்து இரவுகளில் விழித்திருந்து வணக்கங்கள் செய்பவருக்கு சொர்க்கம் வாஜிபாகிவிடும் என ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளன. அவையாவன

1) துல் ஹஜ் எட்டாம் நாளிரவு
2) துல் ஹஜ் ஒன்பதாம் நாளிரவு
3) துல் ஹஜ் பத்தாம் நாளிரவு
4) ஈதுல் பித்ருடைய இரவு
5) பராஅத் இரவு

இரண்டு பெருநாட்களின் இரவுகளில் விழித்திருந்து வணங்குதல் 'முஸ்தஹப்பு'என்பதாக மார்க்க மேதைகள் கூறுயுள்ளார்கள். (105)

# இரதோற்சவம்

வியாவில் ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

இன்று திங்கட்கிழமை காலை இரதோற்சவமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை காரைநகர் வியாவில் புனித தீர்த்தக்கரையில் ஆடி அமாவாசைத் தீர்த்தமும் இடம்பெறும். (10)

# முரசின் இன்றைய பலன்



(05.08.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 20 ஆம் திகதி.பிரதோஷவிரதம்
புனர்பூச நட்சத்திரம் மாலை 06.46 வரை பின் பூசம்
கரிநாள் சதுர்த்திதி,சித்தாமிர்தம் இராகுகாலம 07.34- 09.04 வரை.
சுபநேரம 12.04- 01.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | காலாவதியான பொருட்களை விற்றதால் நீதிமன்று அழைப்பாணை, சுபகாரியச்செலவு, விவாகத்திற்காக கல்வியைக்கைவிடும் தீர்மானம். |
| ரிஷபம் | பிரிட்டன் விஸா பெறுதலுக்கு அனுமதி,சமூக அக்கறையுடன் செயற்பட முன்வரல்,நோய் குணமாக்க வெளியூர் செல்லும் சிந்தனை. |
| மிதுனம் | தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறல், காணி விற்பனைக்கு விளம்பரம், அடையாளஅட்டை புதுப்பிக்க ஆவணங்களைத் தேடி அலைதல். |
| கடகம் | மின்சாரவசதி கிடைக்கும் உத்தரவாதம்,முறையான கவனிப்பின் பின்னர் காவல்துறையிடம் ஒப்படைப்பு, மொழிச்சித்தியின்மையால் வெளியூர் திருமணம் பாதிப்பு, சுவீப் அதிர்ஷ்டம். |
| சிம்மம் | கோரிக்கையை நிறைவேற்ற மகஜர் கையளிப்பு, ஒழுங்கை கடைப்பிடிக்காமையால் வாக்குவாதம், நம்பிக்கையுடன் செயற்பட்டதால் வெற்றிவாய்ப்பு. |
| கன்னி | மாற்றுவலுவுள்ளோருக்கு உதவி கிட்டல், இணையத்தளமூலம் பெற்றோரின் நிலைமை அறிதல், குடிபோதையில் ரகளை,கடன்காரரின் மிரட்டால் உளப்பாதிப்பு. |
| துலாம் | பாடசாலை அபிவிருத்திக்கு இலவசமாக காணி வழங்க முன்வரல், பணப்பரிவர்த்தனையில் திருப்தி காணல், புதிய இடத்தில் தொழில் செய்யும் திட்டம். |
| விருச்சிகம் | கருத்து வேறுபாடு களைதல், நீச்சல் பயிற்சியில் ஈடுபட முன்வரல், பெருந்தன்மையுடன் நடந்ததால் பிரச்சினை தீர்வு,தொழிலில் இருந்த பிரச்சினை விலகல். |
| தனுசு | நோயினால் பயணமுயற்சி இடைநிறுத்தல், பிள்ளைகளை உளநெருக்கீட்டுக்கு உட்படுத்தல், சட்டதிட்டத்தைப் பின்பற்றியதால் கேடு மறைதல், |
| மகரம் | மதுப்பிரியர்களின் அடாவடியினால் மனக் கிலேசம், நிர்ப்பந்தம் காரணமாக திருமணத்திற்கு இசைதல், போட்டிகளில் பரிசில்,யோகாசனப்பயிற்சியில் ஈடுபடமுன்வரல். |
| கும்பம் | திருட்டு முயற்சி முறியடிப்பு,காணிக்குரிய ஆவணம் இன்மையால் பரிதவிப்பு,நன்கொடை வழங்க முன்வரல், நியமனம் கிடைத்தல், போக்குவரத்து சீரின்மையால் பாதிப்பு. |
| மீனம் | தெளிவின்மையால் முடிவு எடுக்கப்படாமை,பிறர் மனத்தைப் புண்படப்பேசி பின் வருந்தும் நிலை, வில்லங்கத்தை விலைக்கு வாங்க முற்படல். |

# இணைச் சம்பியன்





அயர்லாந்தில் இடம்பெற்றுவந்த மகளிர் உலக ருவென்ரி-20 தகுதிகாண் தொடரின் இறுதிப் போட்டி முடிவற்ற போட்டியாக மாறியுள்ளது. இதன் காரண-மாக இலங்கை, பாகிஸ்தான் அணிகள் கிண்ணத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

டப்ளினில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நயன் அபிரி 50 பந்துகளில் 45, பிஸ்பா மரூப் 35 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சண்டிமா குணரத்ன, சாமனி செனவிரத்ன தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் அணியின் இனிங்ஸின் பின்னர் மழை பெய்ததன் காரணமாக போட்டி மறுநாளிற்கு ஒத்திவைக்கப்பட்டது. தொடர்ந்தும் போட்டி நடாத்த முடியாத நிலை ஏற்பட்டதால் இணைச் சம்பியன்களாக அறிவிக்கப்பட்டது.

# சச்சினின் நிறைவேறாத ஆசை




(டுபாய்)

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் நட்சத்திர வீரர் விவியன் ரிச்சர்ட்ஸுக்கு எதிராக 1992ஆம் ஆண்டு உலக கிண்ண ஒரு நாள் போட்டியில் விளையாடும் வாய்ப்பு கிடைக்காதது மிகுந்த வருத்தம் அளிப்பதாக இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

1987ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் பந்து சேகரித்து போடும் சிறுவனாகப் பணியாற்றினேன். அடுத்து 1992இல் நடந்த உலக கிண்ணப் போட்டியில் இயன் போத்தம், கிரகாம் கூச், கெப்ளர் வெசல்ஸ், இம்ரான் கான், மியான்டட், அக்ரம், டெஸ்மாண்ட் ஹெயின்ஸ், ரிச்சி ரிச்சர்ட்சன், மல்கம் மார்ஷல், அம்புரோஸ் போன்ற மகத்தான வீரர்களுக்கு எதிராக விளையாடும் வாய்ப்பு கிடைத்தது மிகவும் சிறப்பானது.

அதே சமயம், எனது ஹீரோவான ரிச்சர்ட்ஸ் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இடம் பெறாததால் அவருக்கு எதிராக விளையாடும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அந்த ஏமாற்றம் இன்னமும் கூட தீரவில்லை. அந்த போட்டித் தொடரில் அலன் டொனால்டு, ஜொன்டி ரோட்ஸ், இன்சமாம் உல் ஹக் போன்ற புதிய நட்சத்திரங்கள் உருவானதும், கிரிக் கெட் உலகில் நீண்ட காலம் பிரகாசித்தததும் கூட எனது நினை வில் பசுமையாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நீச்சலில் தங்கம்



(பார்சிலோனா)

உலக நீச்சல் சம்பியன்ஷிப் தொடரில், அவுஸ்ரேலியாவின் கேட் கேம்பெல், தங்கம் வென்று அசத்தினார்.

ஸ்பெயினின் பார்சிலோனாவில் 15ஆவது உலக நீச்சல் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது. இதன் 100 மீற்றர் பிரிஸ்டைல் போட்டியில், அவுஸ்ரேலிய வீராங்கனை கேம்பெல், 52.34 வினாடி நேரத்தில் வந்து தங்கப்பதக்கம் வென்றார். சர்வதேச போட்டிகளில் கேம்பெல் வெல்லும் முதல் தங்கம் இது.

சுவீடனின் சாரா (53.29), நெதர்லாந்தின் ரனோமி (53.42) ஆகியோர் அடுத்த இரு இடங்களை பெற்று வெள்ளி மற்றும் வெண்கலம் கைப்பற்றினர்.



# சொதப்பிவிட்டோம்

துடுப்பாட்டத்தில் ஒட்டுமொத்தமாக சொதப்பியதே இந்திய அணியுடனான ஒரு நாள் தொடரில் ஒரு வெற்றியையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதற்கு காரணம் என சிம்பாப்வே அணிக் கப்டன் பிரண்டன் ரெய்லர் தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் சாதிக்க வேண்டும் என்ற அதிக விரும்புடன் செயற்பட்ட போதும் அது முடியாமல் போனது ஏமாற்றம். இதில் அனைத்துப் போட்டிகளிலும் படுதோல்வியடைந்தது இரசிகர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னணிகள் முன்னேற்றம்

(கொர்ல்ஸ்பாத்)

அமெரிக்காவில் நடக்கும் தெற்கு கலிபோர்னியா ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் விளையாட, நட்சத்திர வீராங்கனை விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) உள்ளிட்ட நட்சத்திர வீராங்கனைகள் தகுதி பெற்றனர்.

கலிபோர்னியா ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்றுவருகின்றது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் போலந்தின் உர்சுலா ரத்வன்ஸ்காவுடன் நேற்று முன்தினம் மோதிய அசரென்கா 6-1, 6-2 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு காலிறுதியில் சேர்பியாவின் அனா இவானோவிச் 6-1, 6-7 (7-9), 6-2 என்ற செட் கணக்கில் ராபர்டா வின்சியை (இத்தாலி) வீழ்த்தினார்.



அவுஸ்ரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் 7-5, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் அக்னீஸ்கா ரத்வன்ஸ்காவை (போலந்து) வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு காலிறுதியில் பிரான்சின் வர்ஜினி ரசானோ 6-7 (6-8), 7-5, 7-6 (8-6) என்ற செட் கணக்கில் பெத்ரா குவித்தோவை(செக்.) போராடி வென்றார்.

# விலகல்



(பாரிஸ்)

மாண்ட்ரியல் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் இருந்து விலகினார் முன்னணி வீரர் ரோஜர் பெடரர்.

ரென்னிஸ் உலகின் முன்னாள் முதல் நிலை வீரர் சுவிஸின் பெடரர். சமீபத்திய சறுக்கல்களால் இப்போது 5ஆவது இடத்திலுள்ளார். 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இவர், கடந்த பத்தாண்டுகளில் இப்போது தான் மோசமான தர-வரிசையில் உள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் தொடருக்குத் தயாராகும் வகையில், அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள மான்ட்ரியல் தொடரில் இருந்த விலகினார். இதுகுறித்து அவர் கூறுகையில் ஏராளமான இரசிகர்களைக் கொண்டது மான்ட்ரியல் ரென்னிஸ் தொடர். எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இத்தொடரில் இருந்து விலகியது ஏமாற்றமாக உள்ளது. விரைவில் ஆரம்பமாகவுள்ள அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணமே என்னிடம் அதிகம் உள்ளது. அதற்கான உடற்தகுதியையும் ஆட்டத் திறனையும் வளர்த்துக் கொள்ளவே விரும்புகின்றேன் என்றார்.

# ஆளாக்கிய தொடர் இந்தியா

(கராச்சி)

இந்தியாவுக்கு எதிரான தொடர் மூலமே எனக்குச் சிறந்த அனுபவம் கிடைத்தது. அதன் மூலமே நான் சிறந்த பந்து வீச்சாளர் என இனம் காணப்பட்டேன் எனப் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் முகமட் இர்பான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியின் இடதுகை வேகப்பந்துவீச்சாளர் முகமது இர்பான், சுமார் 7.1 அடி உயரமுள்ள இவர், 2010 இல் இங்கிலாந்துக்கு எதிராக அறிமுகமானார். பின், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு எதிரான தொடரில் இடம் பிடித்தார். இதுவரை இவர், 2 டெஸ்ட் (3 விக்கெட்டுக்கள்), 19 ஒருநாள் (29 விக்கெட்டுக்கள்) 4 சர்வதேச ருவென்ரி-20 (3 விக்கெட்டுக்கள்) போட்டியில் பங்கேற்றுள்ளார்.

இந்நிலையில் மேற்கிந்தியத்தீவுக்கான சுற்றுலாவை நிறைவு செய்து பாகிஸ்தான் திரும்பிய நிலையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே முகமட் இர்பான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,இந்தியாவுக்கு எதிரான தொடர் மூலம் நிறையப் பாடம் கற்றுக் கொண்டேன்.இரசிகர்கள் நிரம்பி வழிந்த மைதானத்தில், சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக பந்துவீசும் வாய்ப்புக் கிடைத்தது. இது, என் மீதான நம்பிக்கையை அதிகரித்தது. தவிர, என்னை சிறந்த பந்துவீச்சாளராக அடையாலம் காட்ட உதவியது. இந்தியாவுக்கு எதிராக அறிமுகமாகும் ஒவ்வொரு வீரர்களும் நிச்சயமாக சாதிப்பார்கள். இத்தொடர் நல்ல அனுபவம் கொடுத்தது.

இந்தியா மற்றும் தென்னாபிரிக்க தொடரில் பங்கேற்ற பின், முழுமையான பந்துவீச்சாளராக மாறிய உணர்வு ஏற்பட்டது. சமீபத்தில் கராச்சியில் நடந்த அக்ரம் தலைமையிலான பந்துவீச்சுப் பயிற்சி முகாமில் பங்கேற்றேன். இந்த முகாமில், வேகப்பந்துவீச்சுக் குறித்து நிறைய ஆலோசனைகள் வழங்கினார். ஸ்விங் செய்து பந்துவீச சிறந்த ஆலோசனை வழங்கினார். இவரது அறிவுரைகள், அடுத்து வரும் போட்டிகளில் சாதிக்க உதவும் என நம்புகிறேன்.

உயரமான வேகப்பந்துவீச்சாளர்களுக்கு உடற்தகுதி குறித்து நிறைய பிரச்சினைகள் வரும் என கூறுகின்றனர். இதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உடற்தகுதி மற்றும் உணவுப் பழக்க வழக்கத்தில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதால், இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. தவிர, பந்துவீசும் போது சரியான அளவில் பாதணி அணிந்து விளையாடுவது சாதகமான விடயம்.




எனது பயிற்சியாளர் கூறும் ஆலோசனைக்கேற்ப விளையாடி வருகிறேன். கடந்த 2010ஆம் ஆண்டுக்கு பின், மீண்டும் பாகிஸ்தானுக்காக விளையாடுவேன் என எதிர்பார்க்கவில்லை. கடந்த ஆண்டு நடந்த இந்தியத் தொடர் மூலம் மீண்டும் விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது மகிழ்ச்சியான விடயம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுச் செய்திகள்

சுரேஸ்மோகன் பொறுப்பான ஆட்டம்

# கிண்ணம் வென்றது

## யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் அணி



வெற்றிக் கிண்ணமும், ஆட்டநாயகன் விருதும் வழங்கப்படுவதைக் காணலாம்

(யாழ்ப்பாணம்)

சுரேஸ்மோகனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பழைய மாணவர் அணிக்கெதிரான ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் 197ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் அணிக்கும், ஆசிரியர் அணிக்குமிடையிலான ருவென்ரி-20 போட்டி ஒன்று கடந்த முதலாம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணியின் பழைய மாணவர் அணி கொலின்ஸ், உதயன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு புறம் தனுஜன் பொறுப்பாக ஆடி பழைய மாண-வர் அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்தார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனுஜன் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கொலின்ஸ், உதயன் தலா இரண்டு, சுரேஸ்மோகன், சுரேன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 87 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் அணி, சுரேஸ்மோகனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 15.3 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சுரேஸ்மோகன் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 45, சுரேன் எட்டு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன், தனுஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக சுரேஸ்மோகன் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டி நிகழ்வு யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் பழைய மாணவர் சங்கத் தலைவர், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டு ஆர்வலர்கள்,நலன்விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

# சைக்கிள், மரதன் ஓட்டம்

(சுழிபுரம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. மேற்கு பிரதேச சபையினால் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டி நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி. மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் வாசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கான இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

போட்டிக்கான திகதி, போட்டி வழி, விதிமுறைகள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் எனவும், விண்ணப்பப் படிவங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

# 69 ஓட்டங்களால்

## சாவகச்சேரி இந்து வெற்றி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணிக்கெதிரான ருவென்ரி-20 போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 69 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் புதிய மைதானத்திறப்பை முன்னிட்டுமேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையிலான ருவென்ரி-20 போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

புதிய மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத்தழுவியது.

# போட்டுத் தாக்கியது ஹோலி படை



சிம்பாப்வே அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டது. இதன்மூலம் முதல்முறையாக வெளிநாட்டு மண்ணில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்துள்ளது ஹோலி தலைமையிலான இந்திய அணி.

சிம்பாப்வேயின் புலவாயோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஒருநாள் போட்டியில் முதலில் ஆடிய சிம்பாப்வே 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் வில்லியம்ஸ் மட்டும் 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மிஸ்ரா 8.5 ஓவர்களில் 48 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.


பதிலுக்கு 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 34 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தவான் 41, ரஹானே 50, ஜடேஜா 48 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை இந்திய அணி 5-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. அத்துடன் வெளிநாட்டுத் தொடர் ஒன்றில் முழுமையாக வென்ற தொடராகவும் இது அமைந்தது.

5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் வென்ற 2ஆவது இளம் கப்டன் என்ற பெருமையை இந்திய கப்டன் ஹோலி பெற்றுள்ளார். ஹோலி தனது 24ஆவது வயதில் இந்த சாதனையை புரிந்துள்ளார்.

2009இல் நடைபெற்ற கென்யாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை உட்சேயா தலைமையிலான சிம்பாப்வே அணி 5-0 என்ற கணக்கில் வென்றது. அப்போது உட்சேயாவுக்கு வயது 23.

இதேவேளை, இறுதிப் போட்டியில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் ஒருநாள் போட்டியில் தனது சிறந்த பந்துவீச்சை பதிவு செய்த இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா, இந்தத் தொடரில் மொத்தம் 18 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.இதன்மூலம் இரு நாடுகளுக்கு இடையிலான ஓர் ஒருநாள் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையை இந்தியா வின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீநாத் துடன் பகிர்ந்து கொண்டுள்ளார் மிஸ்ரா.

2002-03இல் நடைபெற்ற இந்திய-நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான 7 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் 18 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒருநாள் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற உலக சாதனையைப் படைத்தார் ஸ்ரீநாத். ஆனால் மிஸ்ரா 5 ஆட்டங்களில் 18 விக்கெட்டுகளை வீழ்த்தி ஸ்ரீநாத்தின் உலக சாதனையை சமன் செய்துள்ளார்.



ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் கிண்ணம் வென்ற எழுவைதீவு பத்திமா அணியைக் காணலாம். ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இக்கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி எழுவைதீவு பத்திமா அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஊர்காவற்றுறை பிரதேச தவிசாளர் ம. ஜெயனந்தன், வேலணைப் பிரதேச தவிசாளர் போல் உட்பட விருந்தினர்களுடன் கிண்ணம் வென்ற எழுவைதீவு பத்திமா அணியைக் காணலாம். (65)

# சம்பந்தன் தலைமையின் சாயம் வெளுக்கிறது

**- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து.**

வடமாகாணசபை தேர்தல் ஆரவாரம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் இழுபறிகள் காணப்பட்டாலும், இந்தியாவின் அழுத்தத்தினால், மாவை வாபஸ்பெற தமிழரசுக் கட்சிக் காரர்களும் புகைந்து அடங்கி விட்டனர். விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளர் என்பது உறுதியாகி வேட்பு மனுத் தாக்கல் செய்வதும் மாலை, மரியாதைகளுடன் முடிந்துவிட்டது. தனது தம்பியை மாகாண அமைச் சராக்குவது என்ற உறுதி மொழியை சம்பந்தன் வழங்கிய துடன் சுரேஷ் பிரேமச்சந்திர னும் அடங்கிவிட்டார். அவரது கட்சியைச் சேர்ந்த ஐங்கரநேசனுக்குத்தான் இலவுகாத்த கிளிபோல ஓர் ஏமாற்றம். "புரூட்டஸ் நீயுமா" என மனதுக்குள்ளே குமுறு வதைத் தவிர அவருக்கு வேறுவழிகள் இருக்கவில்லை. தம்பியாரை அரசியலில் இறக்கியதன் மூலம், தமிழர் வரலாற்றில் அதிகம் பரீட்சய மில்லாத வாரிசு அரசியலை சுரேஷ் பிரேமச்சந்திரன் தொடக்கிவைத்திருக்கின்றார்.

வேட்பாளர்களை கூட்டமைப் பின் கட்சிகளுக்கு ஒதுக்கும் விடயத்தில்கூட ஜனநாயகத் தோற்றம் கொடுக்கப்பட்டது. வேட்பாளர் தெரிவுக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேயே தெரிவுகள் இடம்பெற்றன. மிகத் தாராளமான வகையில் கூட்டமைப்பின் கட்சிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டது. எவரும் எதிர்பார்த்திராத வகையில் சுரேஷின் ஈழமக் கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சிக்கு அடுத்தபடியாக பெரிய கட்சி அந்தஸ் தினை அது பெற்றிருக் கின்றது.

தமிழரசுக் கட்சிக்காரர் களுக்குத் தங்களது முதன் மை நிலை கீழிறங்குகின்றது என்பதையிட்டு புகைச்சல்தான். ஆனாலும் ஒருவாறு அடக்கிக் கொண்டனர். சம்பந்தன் தலைமைக்குப் பின்னால் நின்று வியூகம் வகுக்கும் அமெரிக்க - இந்திய கூட்டின் இலக்கு மிகவும் தெளிவானது. இலங்கையில் ஆட்சிமாற்றம் ஒன்றைக் கொண்டுவருவதே அதன் இலக்கு. அதற்கு வடமாகாணசபைத் தேர்தலை எவ்வளவு உச்சத்திற்கு பயன்படுத்தலாமோ அந்தள விற்கு பயன்படுத்த முனைகின்றது.

இந்த ஆட்சிமாற்றம் நிகழ வேண்டுமானால், தென்னிலங் கையில் பேரினவாத அணியி லிருந்து மகிந்தர் அரசாங்கம் தனிமைப்படுத்தப்பட வேண் டும். மகிந்தர் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்துக்கொண்டிருக் கின்ற, மகிந்தருக்குப் பலம் சேர்க்கின்ற பேரினவாத அணி அவரிடமிருந்து விலக வேண்டும். வடமாகாணசபைத் தேர்தல் அதற்கு உதவும் என இந்திய - அமெரிக்கக் கூட்டு திடமாகவே நம்புகின்றது.

தென்னிலங்கையில் இச்செயற்பாடு நடைபெற வேண்டுமானால் அதற்கு முன்னர் தமிழர்அரசியல் தமிழ்த்தேசியநீக்கம் செய்யப் படவேண்டும். ஏனெனில் தமிழ்த்தேசியவாதமும், பேரின வாதமும் ஒன்றையொன்று பலப்படுத்துபவை. புலிகளும், மகிந்தரும் பலமானது இந்தப் போக்கினால்தான். எனவே தற்போதைய நிலையில் ஆட்சிமாற்றம் ஒன்று இடம் பெற வேண்டுமானால், தென்னிலங்கையில் மகிந்தர் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

தென்னிலங்கையில் மகிந்தர் தனிமைப்படுத்தப்படுகின்றாரோ இல்லையோ தமிழர் அரசிய லில் தமிழ்த்தேசியநீக்கம் செய்வதற்கு, போர்க்காலத்தி லேயே சம்பந்தன் தலைமை, உத்தரவாதம் கொடுத்துவிட்டது. போர் முடிந்த கையோடு, தமிழ்த்தேசியநீக்க வேலைத் திட்டத்தினைக் கட்டம், கட்ட மாக நகர்த்தத் தொடங்கியது.

அந்த நகர்த்தல் செயற்பாட் டில் முதலாவது கட்டம்தான், கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது புலிநீக்கம் இடம்பெற்றமையாகும். முதலில் புலிநீக்கம், பின்னர் தமிழ்த்தேசியநீக்கம், தொடர்ந்து மக்களை அதற்குத் தயார்படுத்தல் என்பதே இதுவிடயத்தில் சம்பந்தன் தலைமையின் நிகழ்ச்சிநிரலாக இருந்தது. அந்தத் தேர்தலில் புலிகளுடன் நேரடியாக அடையாளம் காணப்பட்ட செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் என்போர் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பி லிருந்து வெளியேறினார்.

இரண்டாவது கட்டத்தில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கொழும்பு மேட்டுக்குடியைச் சேர்ந்த சுமந்திரன் களமிறக்கப்பட்டார். தமிழ்த்தேசியநீக்க அரசியல் செயற் பாட்டை சர்வதேச மட்டத்தில் முன்னெடுப் பதற்கு சம்பந்தனுக்கு ஒரு உதவியாள் தேவைப்பட்டார். அவரும் அரசாங்கத்துடன் இணைந்து கிறிக்கட் விளையாடியும், ஒற்றையாட்சி அடிப்படையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தீர்வை வரவேற்றும், சம்பந்த னுக்கு தமது விசுவாசத்தைத் தெளிவாகவே தெரிவித்துக் கொண்டார்.

மூன்றாவது கட்டத்தில், சம்பந்தன் சிங்கக்கொடியேற்றி தமிழ்த்தேசிய அரசியல் நீக்கத்திற்குத் தயார் எனப் பகிரங்கமாக அறிவித்தார். அதுவும் ரணிலுடன் சேர்ந்து கொடியேற்றியதன் மூலம் தனது உச்ச விசுவாசத்தைக் காட்டிக்கொண்டார். "நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல், விருப்பத்தின் அடிப்படையிலேயே கொடியை ஏற்றினேன்" என துணிச்சலுடன் கூற அவரால் முடிந்தது. இதுவிடயத்தில் கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களுடைய வெளிப்பாடு வெறும் புறுபுறுப்புக்கள் மட்டும்தான்.

நான்காவது கட்டம், கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டமையாகும். இதன் மூலம் வடக்கு - கிழக்கு பிரிப்பிற்கு அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. இத்தேர்தலிலும் தமிழ்த்தேசிய நீக்கத்தைக் கருத்தில்கொண்டு தமிழ்த்தேசிய சாயம் இல்லாத முன்னாள் கல்வி அதிகாரி தண்டாயுதபாணி முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கப்பட்டிருந்தார்.

ஐந்தாவது கட்டம்தான் வடமாகாணசபைத் தேர்தலில் விக்னேஸ்வரனை களமிறக்கியமையாகும். இவ்வளவு காலமும் சம்பந்தன் தலைமையின் தமிழ்த்தேசியநீக்கச் செயன் முறை, விக்னேஸ்வரனின் வருகையோடு முழுமை பெறுகின்றது. அதாவது பண்புமாற்றத்தினைப் பெறுகின்றது. தமிழ்த்தேசிய நீக்கம் செய்யப்பட்ட அரசியலை வருங்காலத்தில் நகர்த்துவதற்கான தொடக்கப்புள்ளியாக அமைகின்றது. சம்பந்தனின் இதுவரைகால உழைப்பிற்கு தற்போது தான் வெற்றி கிடைத்திருக்கின்றது.

கூட்டமைப்பிற்குள் சம்பந்தனும், சுமந்திரனும் மட்டும் தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்றுக்கொண்ட வர்களல்ல. சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை, செல்வம் உட்பட எல்லாத் தலைவர்களுமே தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்றுக்கொண்டவர்கள்தான். ஆனால் மக்களிடம் வாக்குப் பெறவேண்டும் என்பதற்காக தமது தமிழ்த்தேசிய நீக்கத்தை வெளிப்படையாகக் கூறத் தயாரில்லை. அதனால் தமிழ்த்தேசிய சாயத்தை அடிக்கடி பூசிக்கொள்கின்றனர். மாகாணசபைத் தேர்தல் போன்ற குறிப்பான விடயங்களில் மட்டும் இவர்களு டைய சாயம் வெளுத்து கறுப்பும் அல்லாத, வெள்ளையும் அல்லாத செம்மஞ்சள் நிறம் தெரியத் தொடங்குகின்றது.



கொழும்பு மேட்டுக்குடியின் அடிவருடிகள் சிலர் விக்கினேஸ்வரனுக்கு தமிழ்த்தேசிய சாயம் பூச முயற்சிக்கின்றனர். விக்கினேஸ்வரன் ஒரு லிபறல்வாதி. அவரிடம் இனப்பற்று, மொழிப்பற்று, கலாசாரப்பற்று இருக்கலாம். ஆனால் அவரால் ஒருபோதும் தமிழ்த் தேசியவாதியாக மாறிவிட முடியாது. அவருடைய இருப்பு, அவருடைய குடும்பத்தின் இருப்பு எல்லாம் தென்னிலங்கையைச் சார்ந்தது.

---

நீரில்லாத வறட்சியான பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்துள்ளனர். நீரை உறிஞ்சி சேமித்து வைப்பதன் மூலம் அதனை எதிர்காலத் தேவைக்கு உபயோகப்படுத்தலாம். நீரை உறிஞ்சி சேமித்து வைப்பதன் பொருட்டு சொலிட் ரெய்ன் எனும் சீனியைப் போன்ற தூள் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இது பொட்டாசியம் பொலியகிரைலேட் எனும் மூலப் பொருளால்




தயாரிக்கப்பட்டுள்ளது.


குறித்த தூளானது அதன் உருவத்தைப் போல 500 மடங்கு அளவு நீரை உறிஞ்சி சேமித்து வைத்துக் கொள்ளக்கூடியது. மேலும், 10 கிராம் சொலிட் ரெய்ன் தூள்கள் 1 லீற்றர் நீரினை ஜெல்லாக மாற்றி தம்முள் சேமித்து வைக்கும் திறன் படைத்தன. சுமார் 1 வருட காலத்திற்கு ஆவியாகாமல் அந்நீரை சொலிட் ரெய்ன் தூள் சேமித்து தனக்குள் வைக்கக்கூடியது. பின்னர் இதனை மண்ணுக்குள் போடுவதன் மூலம் தாவரங்களின் வேர்களால் அந்நீர் உறிஞ்சப்பட்டு வளர்கின்றன என்று கூறுகின்றனர்.

---

# வீட்டு வைத்தியம்

**- பிரியானா ராஜேந்திரா**

எம்மில் பலர் காலுக்கு பாதணி அணிந்து நடப்பது இல்லை... இதனால் சிலருக்கு காலில் சிறு மரத்துண்டோ அல்லது சிராயோ ஏறுவதற்கு வாய்ப்பு உண்டு. காலின் பாதத்திலுள்ள சிராயை இலகுவாக எடுப்பதற்கு சில வழிமுறைகள்:



★ காலை வெதுவெதுப்பான நீரில் எப்சம் சோல்ற் (Epsom salt) கலந்து ஊறவைத்து கொஞ்சநேரத்தின் பின்பு ஹைட்ரோஜின் பரோக்சைட் (hydrogen peroxide)இல் துருப்பிடிக்காத ஊசியைப் போட்டு கழுவி எடுத்து அதனால் காலில் உள்ள மரத்துண்டையோ அல்லது வேறு எந்தப் பொருளாயிருப்பினும் நுட்பமாக தட்டி வெளியே எடுத்துவிடவும்.


★ இரவு நித்திரைக்குப் போகும்போது ஒரு வெள்ளைப் பாண்துண்டை எடுத்து சுடுநீரில் போட்டு உடனே எடுத்து மெல்லிய சூட்டோடு பாதத்தின், மரத்துண்டு ஏறியபகுதியில் வைத்து ஒரு துணியால் கட்டி விடவும் அதிகாலையில் காலிலுள்ள மரத் துண்டோ சிராயோ வெளியே வந்திருக்கும்.

★ தேசிக்காய் ஊறுகாயை எடுத்து காலின் மரத்துண்டுபோன இடத்தில் ஊசியால் சின்னக் கீறு ஒன்றைப்போட்டு அதன் கீழ் ஊறுகாயை வைத்து நன்றாகக் கட்டிவிடவும். அதிகாலையில் மரத்துண்டு வெளியே வந்திருக்கும்

# எம்.கே.டி. எனும் பண்ணிசைப் பாவலன்

02

- வே.முத்துக்குமார் -



இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தை நாடகத் துறையின் பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். அந்தக் காலகட்டத்தில் பக்தி, தேசபக்தி மற்றும் ராஜ விசுவாசம் ஆகியவற்றை மையப்படுத்திய கதைகளே நாடகங்களாக அரங்கேற்றப்பட்டன. அவற்றுள் மகாபாரதம் மற்றும் ராமாயணம் ஆகிய இதிகாசங்களை மையப்படுத்திய கதைகளும், ஹரிச்சந்திரா, பவளக்கொடி, சாரங்க தாரா, வள்ளி திருமணம், கோவலன், லலிதாங்கி, நந்தனார் மற்றும் பாமா விஜயம் ஆகிய நாடகங்களும் அதிகளவில் அரங்கேற்றப்பட்டன.

நாடகக் கலை வளர்ச்சியின் ஆரம்ப காலத்தின்போது, நாடகத்தில் "ஸ்த்ரீபார்ட்" என்று சொல்லப்பட்ட பெண் கதாபாத்திரத்தை ஆண் நடிகர்களே பெண் வேடமிட்டு செய்து வந்தனர். பிந்தைய காலங்களில் கே.பி. சுந்தராம்பாள், எஸ்.டி. சுப்புலெட்சுமி, ரத்னாபாய், ரமணிபாய், சரஸ்வதிபாய் மற்றும் டி.பி.ராஜலெட்சுமி ஆகியோர் "ஸ்த்ரீபார்ட்" வேடமேற்று நடித்தனர். இதில் எஸ்.ஜி.கிட்டப்பாவுடன் கே.பி. சுந்தராம்பாளும், எம்.கே.டி.யுடன் எஸ்.டி.சுப்புலெட்சுமியும் ஜோடியாக இணைந்து நடிக்கலாயினர். பிற்காலத்தில் கே.பி.சுந்தராம்பாள் எஸ்.ஜி.கிட்டப்பாவையும், எஸ்.டி.சுப்புலெட்சுமி புகழ்பெற்ற சினிமா இயக்குநர் கே.சுப்பிரமணியத்தையும் மணமுடித்துக் கொண்டனர். வழக்கமாக அப்போது நாடகங்கள் இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு அதிகாலை நான்கு மணியளவில் நிறைவு பெறும். அந்தக் காலத்தில் நாடகங்களில் ஹீரோவாக நடித்த பெரும்பாலான நடிகர்கள் அனைவருக்கும் இயற்கையிலேயே நல்ல இனிமையான குரல்வளம் இருந்ததால், மக்கள் முன்னிலையில் மேடையில் அறிமுகமாகும்போது தியாகராஜ கீர்த்தனை ஒன்றை நீண்ட ஆலாபனைகளோடு பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சில கீர்த்தனைகள் பல மணி நேரம் வரையிலும் நீடித்திருந்த போதிலும் கூட அதை மக்கள் வெகுவாக ரசித்தார்களே அன்றி சலிப்படையவில்லை. இதற்குக் காரணமாக, தேர்ந்த நடிப்பாற்றல், தெளிவான மற்றும் அளவான வசன உச்சரிப்புகள் ஆகியவற்றையும் மீறி இசையின் மீதான மக்களின் லயிப்பு சற்று அதீதமாக இருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

1926ஆம் ஆண்டு பவளக்கொடி என்கிற நாடகத்தில் கதாநாயகனாக அறிமுகமானார் எம்.கே.டி. அந்நாடகத்தில் டி.பி.ராமகிருஷ்ணன் என்பவர் கதாநாயகியாக நடித்தார். இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு, எம்.கே.டி.யோடு ஜோடியாக இணைந்தார் எஸ்.டி.சுப்புலெட்சுமி. எம்.கே.டி. - எஸ்.டிஎஸ்: ஜோடி இடையேயான வசனப் பரிமாற்றங்கள் மக்களால் அதிகளவில் வரவேற்கப்பட்டு,. எஸ்.ஜி.கிட்டப்பா - கே.பி. சுந்தராம்பாள் ஜோடிக்கு இணையாகப் பேசப்பட்டது. எம்.கே.டி.யின் தன்னிகரில்லாத குரல் வளமும், தேர்ந்த நடிப்பாற்றலும் இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை, பர்மா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வசித்து வந்த தமிழ் நெஞ்சங்களின் மனதை ஆக்ரமித்து, அவரைப் புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்றன. எந்தவொரு குறிப்பிட்ட நாடகக் கம்பெனியோடும் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை எம்.கே.டி., அவருடைய நாடகங்கள் அனைத்தும் "ஸ்பெஷல் நாடகங்கள்" என்றே அழைக்கப்பட்டு தனியாக அரங்கேற்றப்பட்டு வந்தன. அவருடைய நாடகங்களுக்கு மக்களிடையே அதிகளவில் வரவேற்பு இருந்ததால் நாடகக் கம்பெனிகள் அவரைப் போட்டி போட்டுக் கொண்டு ஒப்பந்தம் செய்தன. அவருடைய ஒருநாள் ஊதியம் ஐம்பது ரூபாயாக உயர்ந்தது. அந்தக் காலத்தில் எந்தவொரு நாடக நடிகரும் வாங்காத ஊதியம் அது.

திரையுலகில் அறிமுகமாவதற்கு முன்பு எம்.கே.டி.யின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இது.

எம்.கே.டி.யினுடைய வள்ளி திருமணம் நாடகம் செங்கோட்டையில் அரங்கேற்றப்பட்டபோது, அதைப் பார்க்க வந்திருந்தார் எஸ்.ஜி.கிட்டப்பா. கரகரப்பிரியாவில் "ராமா நீ ஏடா..." என தியாகராஜகிருதியைப் பாடிக் கொண்டே மேடையில் எம்.கே.டி. தோன்ற, சுற்றியிருந்த ஒட்டு மொத்தக் கூட்டமும் ஆர்ப்பரித்தது. அக்கிருதியில் லயித்துப்போன எஸ்.ஜி.கிட்டப்பா மீண்டும் பாடுமாறு கேட்க, தன் மானசீகக் குருவின் வேண்டுகோளை ஏற்று மீண்டுமொருமுறை அக்கிருதியைப் பாடினார் எம்.கே.டி. நாடகத்தின் இறுதியில் மேடையேறிய எஸ்.ஜி.கிட்டப்பா தன் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை எம்.கே.டி.க்கு அணிவித்து, "பாகவதர்" என்கிற பட்டம் எம்.கே.டி.க்கு மட்டுமே பொருந்தும் என்றார்.

எம்.கே.டி.யினுடைய ஆரம்ப கால நாடகங்களுக்கு தேவுடு ஐயர் என்பவரே ஹார்மோனியம் வாசித்து வந்தார். பிறகு ஜி.ராமநாதன் என்பவர் ஹார்மோனியம் வாசிக்க வந்தார். பிந்தைய காலத்தில் எம்.கே.டி - ஜி.ராமநாதன் கூட்டணி திரையிசையில் புதியதொரு சகாப்தத்தை ஏற்படுத்தியது. பிரபல இசையமைப்பாளர் ஜி.ராமநாதனே அவர்.

(தொடரும்)

பழம்பெரும் திரைப்பட இசையமைப்பாளர் வி.தட்சிணாமூர்த்தி (93) உடல்நலக்குறைவால் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார்.


திருநெல்வேலியில் பிறந்து தொழிலுக்காக இடம்பெயர்ந்து கேரளாவின் ஆலப்புழையில் வசித்தார். அடிப்படையில் கர்நாடக இசை வாய்ப்பாட்டுக்காரரான தட்சிணாமூர்த்தி மலையாள திரைப்பட இசையில் கர்நாடக சங்கீதத்தை அறிமுகம் செய்தவர். பழம்பெரும் பின்னணிப் பாடகி பி.லீலாவுக்கு வாய்ப்பாட்டு கற்றுத் தந்தார். லீலாவின் தந்தை மூலம் தட்சிணாமூர்த்திக்கு திரைப்பட வாய்ப்பு வந்தது. மலையாள திரையிசை உலகில் இவரை "ஸ்வாமி" என்று அழைப்பர்.

13 வயதில் இசையமைக்கத் தொடங்கிய இவர் 1940இல் "நல்லதங்காள்" படம் மூலம் தமிழுக்கு வந்தார். பிறகு "ஜீவநாடி", "ஒரு கோவில் இரு தீபங்கள்", நந்தா என் நிலா, "ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது" ("நல்ல மனம் வாழ்க" இவர் இசையமைத்த பாடல் தான்) உட்பட 50இற்கு மேற்பட்ட தமிழ் படங்களுக்கு இசையமைத்தார்.

ஏ.ஆர்.ரஹ்மானின் தந்தை ஆர்.கே.சேகரை திரைப்பட உலகுக்கு அறிமுகம் செய்தவர் இவர். பின்னாளில் ரஹ்மான் இளம் வயதில் தட்சிணாமூர்த்தியின் இசையில் கீபோர்ட் வாசித்துள்ளார். கே.ஜே.ஜேசுதாஸின் தந்தை அகஸ்டின் ஜோசஃப், ஜேசுதாஸ், அவரது மகன் விஜய் ஜேசுதாஸ் என மூன்று தலைமுறையினர் இவரது இசையில் பாடியுள்ளனர்.

பல மலையாள் திரைப்படங்களுக்கு இவரது இசையில் இளையராஜா கிற்றார் வாசித்துள்ளார். பின்னர் தட்சிணாமூர்த்தியிடம் சிறிது காலம் கர்நாடக இசை பயின்றார் இளையராஜா. அவரது மகள் பவதாரிணியும் இவரிடம் கர்நாடக இசை பயின்றவர்.

80 வருடங்களாக தமிழ், மலையாளம், தெலுங்கு மொழிகளில் 800க்கு மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்த சாதனையாளர் வி.தட்சிணாமூர்த்தி.



## வி.தட்சிணாமூர்த்தி

## ஹொலிவுட் போகிறார் மாதவன்

3டியில் உருவாகும் ஹொலிவுட் படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகி இருக்கிறார் மாதவன். ஹொலிவுட்டில் 1968ஆம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்ற Night of the living dead என்ற த்ரில்லர் படம் ரீமேக் செய்யப்படுகிறது. இதில் மாதவனுடன் டானியல் ஹாரிஸ், டொம் சிமோர், டோனி டோட், அலோனா டால், சாரா ஹபெல், பில் மோஸ்லே போன்ற ஹொலிவுட் நட்சத்திரங்கள் நடிக்கின்றனர்.

இது பற்றி மாதவன் கூறும்போது, "3டி ஹொலிவுட் படத்தில் நடிப்பதை நினைக்கும் போது த்ரில்லாக இருக்கிறது. ஹொலிவுட்டில் அறிமுகமாக இதைவிட ஒரு நல்ல படம் எனக்கு கிடைக்காது. தயாரிப்பாளர் சிமன் வெஸ்ட் மற்றும் குழுவினருடன் பணியாற்றப்போகிறேன் என்று எண்ணும்போது மகிழ்ச்சி அடைகிறேன். ஏற்கனவே சிமன் பல்வேறு த்ரில்லர் படங்களை ஹொலிவுட்டில் தயாரித்திருக்கிறார். அவர் என்னை தேர்வு செய்திருப்பது எனக்கு கிடைத்த கௌரவமாக கருதுகிறேன்". தமிழ் நடிகர்களில் ரஜினிகாந்த் Bloodstone என்ற ஹொலிவுட் படத்தில் நடித்திருந்தார். அவருக்கு பிறகு கமல்ஹாசன் ஹொலிவுட் செல்ல முயன்றார். அவரை முந்திக்கொண்டு, ஹொலிவுட்டில் அறிமுகமாகிறார் மாதவன்.





## தகுதி இல்லாமல் தம்பட்டம் அடித்துக் கொள்ளலாமா?

காட்டிற்குள் இருந்த சிங்கம் கர்ஜித்தது.

இதைப் பார்த்த புலி, "ஏன் எல்லோருக்கும் கேட்கும்படி இவ்வளவு பயங்கரமாக கர்ஜிக்கிறாய்?" என்று சிங்கத்தைப் பார்த்துக் கேட்டது.


"என்னைக் காட்டுக்கே அரசன் என்று எல்லோரும் ஒப்புக் கொள்வதே நான் அப்படிக் கர்ஜனை செய்து என்னை அடையாளப்படுத்துவதால்தான்" என்று பதில் சொன்னது சிங்கம்.

புதரின் மறைவில் மறைந்திருந்த முயல் இந்த இரண்டு விலங்குகளின் பேச்சுக்களையும் கேட்டது. தானும் சிங்கத்தைப் போல் குரலெழுப்பித் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தது.

தான் இருந்த இடத்தில் இருந்தபடியே பெரிதாகக் குரல் எழுப்பியது.

அந்த வழியே வந்த ஓநாய் குரல் வந்த இடத்தில் பாய்ந்து முயலைப் பிடித்துச் சாப்பிடத் தொடங்கியது.

உயிர் போகும் பொழுதுதான் முயலுக்கு, "தகுதி இருந்து அடையாளப்படுத்திக் கொண்டால்தான் மதிப்பு உண்டு. இல்லையேல், எனக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்" என்கிற ஞானம் பிறந்தது.



**இம்மரபணு மாற்றத்திற்கு உள்ளான ஆண் தீங்குயிரியும், சாதாரண பெண் தீங்குயிரியும் இணைவதன் மூலமாக உருவாகும் முட்டைகளில் இருந்து வெளிப்படும் ஆண் இனம், தன் உடலில், தனது இனத்தினை அழிக்கும் நஞ்சுடனேயே பிறக்கிறது. அது வளர்ந்து ஏனைய பெண் தீங்குயிரிகளுடன் உறவில் ஈடுபடும்போது அப்பெண் தீங்குயிர்கள் அனைத்தும் இறந்துவிடும்.**



# தீங்குயிர் ஒழிக்கும் மரபணு அறிவியல்

**சர்வசித்தன்**

காலங்காலமாக வேளாண் உணவு உற்பத்திக்கு அச்சுறுத்தலாக விளங்குபவை தீங்குயிரிகளே. இவற்றை அழிப்பதற்கெனப் பூச்சி கொல்லிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், அவை சம்பந்தப்பட்ட தீங்குயிரிகளை அழிப்பதோடு மட்டும் நின்றுவிடாது சுற்றுச் சூழலையும் மாசுபடுத்திவிடுகின்றன. மேலும், பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தும் மனிதர்கள், அண்மையில் வாழும் ஏனைய உயிரினங்கள் முதலியனவற்றுக்கும் இவை தீமை விளைவிக்கின்றன.

பூச்சிகொல்லிகளால் ஏற்படும் பாதிப்புகளை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தும் வகையில், ஆய்வுகள் மேற்கொண்டு வருவதன் பயனாய், இவ்வகைத் தீங்குயிரி இனங்களின், ஆண்களை மலடாக்குவதன் மூலம், அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முறை உருவானது.

இவ்வகையில் மலடாக்கும் உத்தி உலக நாடுகள் பலவற்றில் சுமார் அரை நூற்றாண்டுக்கும் மேலாக நடைமுறையில் உள்ளன. பயிர்கள் மற்றும் கால்நடைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் (தீங்குயிரிகள்) பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, அவற்றின் ஆண் பூச்சிகள் கதிர் வீச்சின் துணையோடு மலடாக்கப்படுகின்றன. இவற்றைப் பின்னர் வெளியே பறக்கவிடுவதன் மூலம், இவை ஏனைய பெண் பூச்சிகளுடன் உறவு கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இவ்வாறான உறவின் மூலம் வெளிவரும் முட்டைகள் புதிய உயிரினைத் தோற்றுவிக்கும் பலம் இழந்தவையாக இருப்பதால் இம் முறையின் மூலம் சம்பந்தப்பட்ட தீங்குயிரினம் காலப்போக்கில் முற்றிலும் அழிந்துவிட வாய்ப்பு உருவாகிறது. இவை ஓரளவு வெற்றியையும் அளித்து வருகின்றன.

அமெரிக்காவிலும், பிற நாடுகள் சிலவற்றிலும் கால்நடைகளைத் தாக்கிவந்த திருகுப் புழுக்கள் (Screw Worm) இதுபோன்று, ஆண் புழுக்களை மலடாக்கிய தன் வழி முற்றாக அழிக்கப்பட்டிருக்கிறது. அதே போல், அமெரிக்காவின் மிகப்பெரும் ஏரிகளில் பரவி வந்த ஒருவகை ஒட்டுண்ணி மீனினமும் மேற்குறிப்பிட்ட உத்தியின் மூலம் இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது. ஆனால், இம் முறையின் மூலம் ஆண் பூச்சிகளை மலடாக்குவதில் மிகுந்த கவனமுடன் செயல்படும் நிலை அவசியமாய் இருப்பதுடன், செயல்முறையில் சிரமங்களும் ஏற்படுகின்றன.

கதிர்வீச்சின் அளவு அதிகமாய் அமைந்துவிடில் ஆண் பூச்சிகள் ஏனைய பெண் பூச்சிகளுடன் உறவு கொள்ளும் வலிமையினை இழந்து விடுகின்றன. அதே போன்று கதிர் வீச்சின் அளவு குறைவாக இருப்பின், அவற்றின் மூலம் உருவாகும் முட்டைகளில் இருந்து புதிய உயிர்கள் தோன்றும் வாய்ப்பும் ஏற்படலாம். எனவே, இதில் மிகுந்த எச்சரிக்கையுடன், குறிப்பிட்ட அளவில் மட்டுமான கதிர் வீச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதிலும், ஏற்கனவே மலடாக்கப்பட்ட ஆண் பூச்சிகளுக்கும், புதியனவற்றுக்கும் இடையே வேறுபாடு காண்பதிலும் சிக்கல்களை எதிர் கொள்ளும் நிலை உள்ளது. இதனால், இம்முறையின் மூலம் தீங்குயிரிகளை அழிக்கும் செயல் துரித வளர்ச்சியினை எட்டுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது

1990 ஆம் ஆண்டளவில், பிரிட்டனின் ஒக்ஸ்ஃபோர்ட் நகரில், ஒக்ஸிடெக் (Oxitec) என்னும் உயிரியல் தொழில் நுட்ப நிறுவனத்தினை நடாத்தி வந்த லூக் அல்ஃபே (Luke Alphey) இந்த மலடாக்கும் துறையில், ஏற்கனவே இருப்பதைவிடவும் சுலபமான, அதே சமயம் செலவு குறைந்த முறை ஒன்றினைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார்.

அடுத்த சில வருடங்களில்பழங்களைப் பாதிக்கும் ஒரு வகை ஈக்களை ஒழிப்பதற்கு மரபணுக்களுடன் இணைந்த அதே இன ஈக்களை இவர் உருவாக்கியிருந்தார். இவரது செய்முறையின் விளைவால், புதிய நச்சு மரபணுக்களைப் பெற்றிருந்த ஈக்களின் உறவால் அவற்றுடன் உறவு கொண்ட ஈக்கள் மடிந்து போயின.

2006 இல் இந்த மரபணு மாற்றத்தின் வழி தன் இனத்தையே அழிக்கும் பருத்திப் புழுக்கள் வெளி உலகிற்கு அறிமுகமாயின. இவைகளே, உலகின் முதல் மரபணு மாற்றத் தீங்குயிரி என்னும் பெயரையும் பெற்றன. இம்மரபணு மாற்றத்திற்கு உள்ளான ஆண் தீங்குயிரியும், சாதாரண பெண் தீங்குயிரியும் இணைவதன் மூலமாக உருவாகும் முட்டைகளில் இருந்து வெளிப்படும் ஆண் இனம், தன் உடலில், தனது இனத்தினை அழிக்கும் நஞ்சுடனேயே பிறக்கிறது. அது வளர்ந்து ஏனைய பெண் தீங்குயிரிகளுடன் உறவில் ஈடுபடும்போது அப்பெண் தீங்குயிர்கள் அனைத்தும் இறந்துவிடும்.

இந்தச் செயல்முறையில், முன்னைய, மலடாக்கும் செயல் முறையினை விடவும் வேகமாகக் குறிப்பிட்ட தீங்குயிரினை அழிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அடுத்த மூன்று வருடங்களில் இது அடைந்த வெற்றியின் காரணமாக, சென்ற வருட இறுதி-வரை அமெரிக்காவில் மட்டும் சுமார் இருபது மில்லியன் மரபணு மாற்றத் தீங்குயிரிகள் உருவாக்கி வெளிவிடப்பட்டிருக்கின்றன.

**டெங்கு நுளம்புகளை அழிக்கும் ஆய்வுகள்:**

மேற்சொன்னவாறு பருத்திச் செடிகளை நாசம் செய்யும் புழுவினத்தை அழிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, வறண்ட வலயப்பகுதிகளில் ஆண்டு தோறும் ஐம்பது முதல் நூறு மில்லியன் பேரைப் பலிவாங்கும் டெங்குக் காய்ச்சலின் காரணகர்த்தாவான "ஏடிஸ்" நுளம்பு களைக் கட்டுப்படுத்தும் ஆய்வுகளில் ஒக்ஸ்சிரெக் நிறுவனம் ஈடுபடத் தொடங்கியது.

2012 மார்ச்சில் உலகசுகாதார நிறுவனத்தினால் (WHO) வெளியிடப்பட்ட தகவலின்படி 1970 ஆம் வருடத்தின் முன் உலகளாவிய அளவில் சுமார் ஒன்பது நாடுகளில் மட்டும் பரவி இருந்த டெங்கு இன்று ஆபிரிக்கா, அமெரிக்கா, கிழக்கு மத்திய தரைக் கடல் நாடுகள், தென்கிழக்கு ஆசியா, மேற்கு பசுபிக் நாடுகள் உட்படச் சுமார் நூறு நாடுகளில் பரவி விட்டிருக்கிறது.

இது மட்டும் அல்லாமல்; உலக சனத் தொகையில் நாற்பது வீதத்தினர்- அதாவது சுமார் 2500 மில்லியன் பேர்- டெங்கின் பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் இருப்பதாகவும், இதில் 1800 மில்லியன் மக்கள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பர் என்றும் குறிப்பிடுகிறது அந்த உலக சுகாதார நிறுவன அறிக்கை! இந்த டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் "ஏடிஸ் ஏஜிப்டி" (Aedes Aegypti) இன நுளம்புகள் வழமையான பூச்சிகொல்லிகளுக்குக் கட்டுப்படுவதில்லை. எனவே இவற்றை இல்லாது ஒழிக்கப் புது-வகை உத்திகளை மேற்கொள்வது அவசியமாக இருந்தது.

இந்நிறுவனத்தின் மரபணு மாற்ற ஆண் நுளம்புகள், ஏனைய பெண் நுளம்புகளுடன் கூடி உருவாகும் முட்டைகளில் இருந்து வெளிப்படும் லார்வாக்கள் (Larvae) ஏனைய லார்வாக்களைப் போன்று வளர்ச்சி அடையும் வல்லமையினைப் பெற்றிருந்தன. ஆனால், அவை கூட்டுப் புழுக்களாக (pupae) மாறும் பருவத்தில் அவற்றின் தந்தையர்க்கு (ஆண் புழுக்களுக்கு) வழங்கப்பட்ட மரபணுக்கள் லார்வாக்களைக் கொன்றழித்து விடும். இதன் மூலம், அப்புதிய லார்வாக்கள் தாம் வளரும் சமயத்தில், மரபணு மாற்றப்படாத நுளம்புகளின் லார்வாக்களுடன் போட்டியிட்டு அவற்றுக்கான உணவின் ஒரு பகுதியினையும் தின்று தீர்த்து விடுகின்றன. இதன் வழியாகவும் அவற்றை இன அழிப்புச் செய்யும் உத்தி கடைப்பிடிக்கப்படுகிறது.

இம்முறை மூலம் மரபணு மாற்றப்பட்ட நுளம்புகள் 2009 ஆம் ஆண்டு, கரீபியன் தீவுக் கூட்டங்களுள் ஒன்றான Cayman Islands-ல் பரீட்சார்த்தமாக வெளிவிடப்பட்டிருந்தன. அங்குள்ள பெண் நுளம்புகளுடன் இவை கூடியதால் உருவான முட்டைகளில் சுமார் பத்து வீதமானவை இம்மரபணுக்களுடன் காணப்பட்டன. இது தொடர்ந்து செயல்படுத்தப்படும்போது, ஏடிஸ் நுளம்புகள் பெருமளவில்கட்டுப்படுத்தப்படுவதுடன், நாளடைவில் அவை முற்றாக ஒழிக்கப்பட்டுவிடும் என்கிறார் அல்ஃபே.

சென்ற வருட இறுதிப் பகுதியில் இதனை விடவும் அதிக செலவில் இதே போன்ற மரபணு உத்தியுடன் கூடிய செயல் திட்டம் ஒன்று பிரேசில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றைவிட மற்றொரு புதிய திட்டத்தினையும், அல்ஃபேயின் குழுவினர் அறிமுகம் செய்ய உள்ளனர். ஏற்கனவே உள்ள முறையில், ஆண் நுளம்புகளை இனங்கண்டு அவற்றுக்கு மரபணு மாற்றத்தினை ஏற்படுத்துவதோடு, பெண் நுளம்புகளின் செயல்பாட்டினைக் கட்டுப்படுத்தும் வகையிலும் மரபணு மாற்று உத்தியினை உபயோகிக்க உள்ளனர்.


பெண் நுளம்புகளே மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதன்மூலம் தாம் வாழ்வதோடு மட்டுமல்லாமல் மனிதர்களுக்கு டெங்கினையும் பரிசாக அளித்துவிட்டுச் செல்கின்றன. இவை பறக்கும் ஆற்றலை இழந்துவிட்டால், இரத்த உறிஞ்சலும், அதன் வழியாக டெங்குப் பரவலும் இடம் பெறாது தவிர்க்கப்பட்டு விடும். அதோடு, ஆண் பெண் என்னும் வேறுபாடின்றி எல்லா நுளம்புகளும் ஏதோ ஒரு வகையில் மரபணுமாற்ற உத்தியின் வழி தமது சந்ததிகளை அழிப்பதில் முனைந்து செயல்படும் நிலையை உருவாக்கிவிட முடியும். இந்த முறைமை, ஏடிஸ் நுளம்புகளை ஒழிப்பதில் துரிதமான வெற்றியினை அளிக்கும் என நம்புகிறார்கள்.

தீங்குயிரி இனங்களை அழிக்கும் இவ்வாறான ஆய்வுகள் ஒரு புறம் நடைபெற்று வந்தாலும், மரபணு மாற்றத்தினை எதிர்க்கும் ஆய்வாளர்கள் இவற்றுக்குத் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதும் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இது போன்ற மரபணு மாற்று உத்திகள் நாம் எதிர்பார்க்கும் மாறுதல்களை மட்டும் அல்லாது நாம் எதிர்பார்க்காதனவற்றையும் ஏற்படுத்த வல்லவை என அவர்கள் எச்சரிக்கின்றனர். இவை ஏனைய உயிரினங்களில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகள் உள்ளதாக அவர்கள் கருதுகின்றனர். குறிப்பாக மாற்று மரபணு உத்தியினை எதிர்ப்பதில் ஐரோப்பிய நாடுகள் முன்னணியில் உள்ளதை மறுப்பதற்கில்லை.

இம்முறைமையை முதலில் உருவாக்கியவரான அல்ஃபே, "தொடரும் வெற்றிகள் மக்களது மனதைக் காலப்போக்கில் மாற்றும் திறன் கொண்டவை. அப்போது மரபணு மாற்றங்களின் மீது மக்களுக்கு இருந்துவரும் சந்தேகமும், பயமும் நீங்க வழி ஏற்படும்" என்கிறார் நம்பிக்கையுடன். காலப் போக்கில் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் ஏனைய பூச்சிகொல்லி மருந்துகளுக்கு பதிலாக, இது போன்ற மாற்று உத்திகள் பயன்படுத்தப்படுவதன் வழி இம் மருந்துகளால் எமது சூழலில் உருவாகும் பாதிப்புகளில் இருந்தும் விடுபடுவதோடு நோய்களையும் விரட்டுவதில் வெற்றி காணும் நிலை உருவாகும்.

# விவசாய அலுவலகங்களுக்கு வாகனங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் விவசாயத் துறை அலுவலகங்களுக்கு வாகனங்களும் கணினிகளும் கையளிக்கப் பட்டுள்ளன.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ்பாணத் திலுள்ள ஆளுநர் அலுவலகத் தில் நடைபெற்றது.

உணவு மற்றும் விவசாய நிறுவனம் வடமாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவதற்காக உணவு மற்றும் விவசாய நிறுவனத்தால் இவை அன்பளிப்பு செய்யப்பட்டன.

மீசாலையில் உள்ள "பழ முதிச்சோலை" விற்பனை நிலையத்திற்கு வாகனம் வழங்கப் பட்டது.

கூட்டுறவு சங்கத்தின் தலைவரும் முகாமையாளரும் ஆளுநரிடமிருந்து வாகனத்தினை பெற்றுக் கொண்டார்கள். கணனிகள் விவசாய அமைச்சு, விவசாயத் திணைக்களம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், விவசாய அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம்.ஹால்டீன், விவசாய திணைக்களப் பணிப்பாளர் திரு.எஸ்.சிவகுமார், யாழ் மாவட்ட விவசாய விரிவாக்க பிரதிப் பணிப்பாளர், ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாய உதவிப் பணிப்பாளர்கள், விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ரி.சர்வானந்தா ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தெய்வீக இசை அரங்கு



வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த தேர் உற் சவங்களை முன்னிட்டு தெல்லிப் பளை பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், மாவை பிருந்த கலாலையா நிறுவனமும் இணைந்து தெய்வீக இசை அரங்கு நிகழ்வினை இன்றும் நாளையும் நடத்த் ஏற்பாடு செய்துள்ளன.

யாழ் முன்னணிக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் இத் தெய்வீக இசை நிகழ்வுகள் இன்று காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் இரவு 8 மணி தொடக்கம் 12 மணிவரையும் மாவிட்டபுரம் க்ந்தசுவாமி கோயிலிலும் நாளை செவ்வாய்க்கிழமை இதே போன்று கீரிமலை நகு லேஸ்வரர் ஆலயத்திலும் நடை பெறவுள்ளன. (10)

## ஆசிரியர்களுக்கு ஊடகப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து வடமாகாணப் பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான தொடர் பாடல் மற்றும் ஊடகக் கல் விக்கான பயிற்சி நெறியினை வழங்கி வருகிறது.

பாடசாலைகளில் தரம், 10 தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கு தொடர்பாடல் ஊடகக் கல்விப் பாடத்தைப் புகட்டுவதற்கான ஆசிரிய வள அணியினரை உருவாக்கும் நோக்குடன் யாழ் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்று வரும் இந்தச் செயலமர்வுக் கருத்த ரங்கு பாடசாலை விடுமுறைக் காலத்திலும் வழமை போன்று வெள்ளி, சனி ஆகிய இரண்டு தினங்களும் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு புதன்கிழமையும் முழுநேர இலத்திரனியல் ஊடகப்பயிற்சிக்கான ஒழுங் குகள் செய்யப்பட்டுள்ளதாகவும குறிப்பிட்ட மூன்று நாட்களும் சம் பந்தப்பட்ட ஆசிரியர்கள் தவறாது சமூகமளிக்க வேண்டுமென பயிற்சிநெறி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (10)



சொல்லத்துடிக்கிற நினைவுகள் சிறுவர்களுக்கான உருவக் கதைகள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றபோது நூலை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் வர்த்தகரொருவருக்கு வழங்குவதைக் காணலாம். (104)

## "தாய்நாடு" இணையத்தளத்தின் பார்வையில் முதன்மை வேட்பாளர் சின்னத்துரை தவராசா

எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடுகின்ற சின்னத்துரை தவராசா குறித்த விபரம் தாய்நாடு என்ற இணையத்தில் வெளியாகி யுள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டத் தின் ஆரம்பகர்த்தாக்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் இவர். ஈழ விடுதலை இயக்கத்தில் இணைந்து செயற்பட்ட முற் போக்கு புத்திஜீவியாக மிளிர் ந்தவர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மூலம் நாடாளுமன்ற அரசியலில் பிரவேசித்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கியவர்.பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் மற்றும் சட்ட ஆலோசகராக இப்போது விளங்கி வருகின்றார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் சம புலமை உடையவர். அதே போல சட்ட நுணுக்கங்களிலும், அரசியல் சாணக்கியங்களிலும் சிறந்தவர்.

அரசியலில் மிக நீண்ட அனுபவமும், அறிவும் உடைய தவராசா உயர் நீதிமன்ற சட்டத்தரணிகளைக் காட்டிலும் சட்ட அறிவில் முதிர்ந்தவர். குறிப்பாக அரசியல் சட்டத்தில் வல்லுனர். அதிலும் இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13 ஆவது அரசமைப்புத் திட்டம் போன்றவற்றின் சரத்துக்களை நன்கு அறிந்தவர். தமிழர்கள் போராடிப் பெற்ற வரப்பிரசாத மான இலங்கை - இந்திய ஒப்பந் தத்தின் மூலமான அரசமைப்பின 13 ஆவது திருத்தம் மூலம் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று பற்றுறுதியுடன் செயற்பட்டு வருபவர். மட்டும் அல் லாமல் அரச மைப்பின் 13 ஆவது திருத்தத்தை பாதுகாத்தே ஆக வேண் டும் என்று பகிரங்கமாக பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றார்.



சர்வகட்சி மாநாட்டில ஈ. பி. டி.பி.யின் சார்பில் கலந்து கொண்டு இவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண உட்பட ஏனைய அமைச்சர்கள் கூட வியக்கத் தக்க வகையில் வாதங்களை முன் வைத்தவர்.

மாகாணசபையை நடத்து கின்றமைக்கு அல்லது மாகாண சபையை வழி நடத்துகின்ற மைக்கு மிக பொருத்தமான ஒருவராக சிவில் அமைப்புக்கள் பிரதிநிதிகள் இவரை நம்பு கின்றனர்.



## வேலை வாய்ப்புச் செய்திகள்

சந்நிதி முருகன் வேக்சொப் அன்ட் சேவிஸ் நிறுவனத்துக்கு சேவிஸ் வேலை, மெக்கானிக் வேலை தெரிந்தவர்கள் பழகுபவர்கள் ஆண்கள் தேவை. தொடர்புக்கு-077 711 0199

---

யாழ். நகரில் உள்ள சைவ உணவகத்துக்கு களஞ்சியக் காப்பாளர், உணவு பரிமாறுபவர், சுத்திகரிப்பாளர் சமையல் உதவியாளர் சிட்டை எழுதுநர் வேலைக்கு ஆட்கள் தேவை. தொலைபேசி இலக்கம் -0776551343,

---

பெண்களுக்குரிய ஆடைகள் தைப்பதற்கான வேலையாட்கள் தேவை (பெண்கள் மட்டும்) தொடர்புகளுக்கு -077 452 9465, 075 727 3731

---

நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இயங்கும் பார்மசிக்கு வேலையாட்கள் தேவை. தொடர்புக்கு-0774656428

---

கொழும்பில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்துக்கு சுறுசுறுப்பான மேசன் கூலி ஆட்கள் உடனடியாகத் தேவை மாதவருமானம் 45,000, 50,000 ரூபா தொடர்புக்கு-0777065127

---

தனியார் நிறுவனத்துக்கு சாரதி உதவியாட்கள் தேவை தொடர்புகளுக்கு- 0774283019, 0717649497.

---

பயிற்றப்பட்ட பயிலுனர் தனியார் வெற்றிடங்களுக்கு க.பொ.த சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம். தொடர்புக்கு-0773639723

---

Modara இல் இயங்கும் தையல் நிலையத்துக்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை தொடர்புக்கு-0770240852,0727666607,

---

கொழும்பு -06 மற்றும் 11 இல் அமைந்துள்ள பிரபல்யமான புடவைக்கடைக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. தங்குமிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு: 011 244 8860.

---

நிரந்தர வேலை வாய்ப்புக்காக திறமையான அனுபவமுள்ள கிறில் கேட் செய்வதற்கு தெரிந்த பாஸ் ஒருவர் தேவை பயிற்சி இல்லாத உதவியாளர்களும் தேவை. 18-24 க்கு இடையிலான உதவியாளர்களுக்காக) தொடர்புகளுக்காக-072 365 8702, 071 9665 010

---

வேலை வாய்ப்பு ஆண்கள் பெண்கள் தேவை வயது (18-35) தொடர்புக்கு 071 522 2967

---

நம்பிக்கையான பணிப்பெண்கள் ஒரே வீட்டிற்கு இருவர் தேவை தொடர்புக்கு- 0777 970 185

---

வெயிட்டர் வேலைக்கு ஆட்கள் தேவை தொடர்புக்கு -077871 4662

---

இலங்கையின் எப்பிரதேசத்திலும் வேலைவாய்பு காகில்ஸ், ஆபிகோ, பொலீத்தீன், ஆடை, தேயிலை, பிஸ்கட், டொபி, ஜாம் போன்ற உற்பத்திகளை தரம்பிரித்தல் போன்றவற்றுக்கு வேலையாட்கள் தேவை. தொடர்புக்கு- 077 437 2995

---

உடன்தேவை கைபேசி (MobilPhone) விற்பனையார் 10 பேர் கைபேசி திருத்துபவர் (Mobil Phone Technician) 10 பேர் தேவை. தொடர்புக்கு- கே.சிவா-0775112240

# ரணிலுடன் கரு.பனிப்போர் உச்சம் மூடிய அறையில் மணிக்கணக்கில் பேச்சு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கம்பஹா மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவுக்குமிடையில் வெள்ளிக்கிழமை மாலை இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பல மணிநேரம் மிக இரகசியமான முறையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவருக்குமிடையில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. நுகோகொடையிலுள்ள நாலாந்திர ராமய விஹாரையில் விஹாராதிபதி தீனியாவல தேரர் முன்னிலையில் மூடிய அறைக்குள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினரான கரு ஜயசூரியவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் ஓரளவு தீர்வுக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களின் பிரசார நடவடிக்கைகளின் பொறுப்பை கரு ஜயசூரியவிடம் ஒப்படைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளார். கட்சியிலுள்ள அனைவரும் ஒற்றுமைப்படல் மற்றும் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கல் போன்ற விடயங்களை கருஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிக்குள் தொடர்ந்து நாம் சண்டையிட்ட போதும். இவற்றையெல்லாம் நிறுத்தி விட்டு இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த ஆட்சியொன்றை வழங்குவதற்கு பாடுபடுவதே அவசியம் என்றும் கரு சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கருஜயசூரியவுக்குமடையிலே ஒரு கட்சி அரசியல் முரண்பாடு காணப்பட்டு வந்த நிலையிலே இந்தச் சந்திப்பு திடீரென இடம் பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பை மலிக் சமரவிக்கிரம ஏற்பாடு செய்திருந்தார். இந்தச் சந்திப்பின் பின்னர் கருஜயசூரிய ஊடகவியலாளரைச் சந்தித்து கருத்தும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மிருக பலிபூஜைகள் தடையின்றி நடக்கும்

முன்னேஸ்வரம் காளி கோயிலில் இம்முறை மிருக பலி பூஜைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெயர் குறிப்பிட விரும்பாத ஆலயத்தின் சிரேஸ்ட பூசகர் ஒருவரை ஆதாரம் காட்டி ஆங்கில ஊடகமொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மிருக. பலி பூஜைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெறவிருந்த மிருக பலி பூஜைகளை பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தடுத்திருந்தார்.

இந்தச் சம்பவம் துரதிஸ்டவசமானது என ஆலய பூசகர் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டில் எவ்வித தடையுமின்றி பூஜைகளை நடாத்த விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# நவீன விளையாட்டு மைதானம் கிழக்கில் நிர்மாணம் துரிதம்

(யாழ்நிருபர்)

மட்டக்களப்பு 'வெபர்' விளையாட்டு மைதானம் ரூபா 150 மில்லியன் செலவில் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் நிர்மாண வேலைகள் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நிறைவடையவுள்ளது. மட்டக்களப்பு மாட்டத்திலேயே மிகவும் புராதன முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விளையாட்டு மைதானமாக இவ்விளையாட்டு மைதானம் விளங்குகிறது. வெபர் விளையாட்டு மைதானம் சுமார் 10 ஏக்கர் விசாலமான காணியில் உள்ளக அரங்கு வெளி அரங்கு கொண்ட சகல வசதிகளும் அமைந்த நவீன வீளையாட்டரங்காக நிர்மாணிக்கப்பட்டு வருகிறுது.இங்கு 400 மீற்றர் ஓடுதளம்,கூடைப்பந்தாட்டக்கூடம், உதைபந்தாட்ட மைதானம், கரப்பந்தாட்டக்கூடம்,நீச்சல் தடாகம், பட்மின்ரன் தளம் என அனைத்து விதமான விளையாட்டுத் தளங்களையும் அமைக்கப படவுள்ளன.

வெபர் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி வேலைகளை கடந்த வருடம் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்ததுடன் அடிக்கல்லினை மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் வீ.முரளிதரன் நாட்டியமை குறிப்பிடத்தக்கது. (10)

# பரமர் சங்கமம்



'நம்ம பெத்தாப் பிள்ளை மத்தலை பெத்தா சள்ளை' இந்தப்பழமொழியில் இறுதியாக வந்த 'சள்ளை' எண்ட சொல்லை கனபேருக்கு விளங்காமல் இருக்கம். தமிழில் இப்படி எத்தனையோ மறைந்து கொண்டே இருக்கின்றன.

'சள்ளை' என்பது வயித்தின் இருபக்கமும் அமைந்த பகுதி. கிரந்தம், எள்ளல் பேச்சுக்கு அப்பழச்சொல்வது அந்தக்கால வழமை. பரமர் இந்த வாக்கியத்தை நம்ம படைப்பாளிகள். எழுத்தாளர்களை சுட்டிக் குறிப்பிட நேர்ந்து விட்டது. நம்மவருக்கு நம்ம கலை, இலக்கியமெண்டால் 'சள்ளை'எண்டு குறிப்பிட்ட கிரந்தமும் எள்ளலுமாய்த்தான் உள்ளது இங்கே அது மாறி நோக்கப்படுவதைக் கவனிக்கலாம். நம்மது எண்டாள் பிள்ளை எனப்பேண வேண்டிய நமது இலக்கியக்காரர்களின் படைப்புகளை பிறத்தியாரின் சள்ளையாக நடத்துவதை நோக்கலாம். நம்ம இலக்கியப் படைப்பாளிகள் தமிழ்ச் சட்டம்பிமாராகவே அதிகமாக இருந்தனர். கே. டானியல், டொமினிக் ஜீவா போன்ற திண்ணைக்கல்வி கற்ற பாமர எழுத்தாளர்களும், கை விரல்களில் எண்ணிவிடக்கூடிய அளவு அரச அதிகாரிகளும் இலக்கியத்துறையில் துலங்கினர். இவர்களில் அரச நிர்வாக அதிகாரிகளாக விளங்கிய படைப்பாளிகள் இலக்கியத்தால் தங்களை வளர்த்துக் கொண்டதுதான் கண்டமிச்சம். அதனால் இண்டைக்கும் நம்ம இலக்கிய உலகம் ஈடேற முடியவில்லை. பரமர் பிறந்த நவாலிக்கு போய் இருந்த சமயம் உடுவில் கல்லூரியில் படிப்பிச்சுப்போட்டு இருபாலேல இயங்கும் பலாலி, ஆசிரியப் பயிற்சிக்கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவியான பெறாமகள் ஒரு கதைக் கட்டை நீட்டினாள்.

போட்டோக்கொப்பி எடுத்து சில ஈழத்து சிறுகதைகள் தொகுக்கப்பட்டிருந்தன. அதனில் முதல் கதையாக 'நிலவிலே பேசுவோம்'கதை இருந்தது. எழுதிய ஆசிரியரின் பெயர் இருக்கவில்லை. அந்தக் கதை ஒருகாலத்தில் பேசப்பட்ட கதையாக இருந்தால் உடனே அதை எழுதியவர்பெயர் என் நினைவுக்கு வந்து விட்டது. ஏனைய கதைகளும் அவ்வாறே எழுதியவரின் பெயர் இடம்பெறாமல் கதைகளின் பெயர்களுடன் காணபட்டன. அக்கதைகளின் படைப்பாளிகள். யார், யாரென்று எனக்குப் 'புண்ணில புளிபட்ட மாதிரி'கோவம் வந்தது. எங்கட நாட்டு ஆசிரிய மாணவர்களுக்கு எம்மிலக்கியப் படைப்புக்களை பாடநெறியாக வைத்தால் படைப்பாளி யார், அக்கதை எழுந்த பின்னணி என்ன என்னும் பேதங்களைப் பெறாமல் வெளியேறும் ஆசிரியமணிகள் அது சார்ந்த பாடநெறிளை 'ஊமைப் படம் பார்த்த மாதிரியா ஒப்புவிப்பது?

உயர்கல்விப் பீடங்களான பல்கலைக்கழகம் மற்றும் உயர் கலைக்கல்லூரிகளில் எம் நாட்டு கே. டானியல் போன்றவர்களது 'கானல்'நாவல் பாடநூலாக தெரிவு செய்யப்பட்டுள்ளதை அறியும்போது பெருமையாக உள்ளது. அதேவேளை ஆசிரிய பயிற்சிக்கல்லூரிகளில் ஈழப்படைப்பாளிகளை இருட்டடிப்புச்செய்து அவர்களின் படைப்புகளை போதாத்துக்கு எடுத்துக் கொள்வதானது 'குலை இருக்கச் சுளை புடுங்கும்' செயலுக்கு ஒப்பானதெல்லே சொல்லுங்க பாப்பம்.......

# வடக்கில் நடமாடும் சேவை; பத்தாயிரம் பேர் பயன் பெற்றனர்

## "க பே" அமைப்பு பெருமிதம்

(கொழும்பு)

வடமாகாணத்தில், அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டை உள்ளிட்ட சான்றுப்பத்திரங்கள் பெற்றுக் கொடுக்க என நடைபெற்ற 37 நடமாடும் சேவை 10731பேர் நனன்மயடைந்துள்ளனர்.

கபே இயக்கம், மனித உரிமைகளுக்கான கேந்திரம் மற்றும் ஆட்பதிவுத்திணைக்களம் என்பன இணைந்து இந்த நடமாடும் சேவையை ஏற்பாடு செய்திருந்தன 15 நாட்கள் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்நடமாடும் சேவை இடம்பெற்றது.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அதனைத் பெற்றுக் கொடுக்கும் வகையில் இலவசமாக இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப் பட்டமை விசேட அம்சமாகும்.

புகைப்படம் எடுத்தல் பொலிஸ் அறிக்கை பெறுதல், சான்றுப்பிரதிகள் எடுத்தல் என்பன இலவசமாக செய்து கொடுக்கப் பட்டன.

முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இந்த நடமாடும் சேவை எதிர்வரும் வாரங்களில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் நடைபெறவுள்ளதாக கபே இயக்கமும் மனித உரிமைகள் கேந்திரமும் அறிவித்துள்ளன.(10)

## புதிய சிறுவர் பூங்கா

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்களான அமரர் சண்முகம் அழகம்மா தம்பதிகளின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியர்களாகக் கடமையாற்றி சிவபதமடைந்த அமரர் சண்முகம் அழகம்மா தம்பதிகளின் நினைவாக அவர்களின் புதல்வர்கள் அழகிய சிறுவர் பூங்கா ஒன்றினை அமைத்துக் கொடுத்துள்ளனர். அண்மையில் நடை பெற்ற இப்பூங்கா திறப்ப விழாவில் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா ,மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் ச.சிவனேஸ்வரன் முன்னாள் ஆசிரியர் க.தம்பாப்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (10)

# புதிய கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் கிழக்கில் ஆரம்பம்

கிழக்குப் பல்கலைக்கழக 2011/2012 ஆம் கல்வி ஆண்டுக்கு விஞ்ஞான மற்றும் கலை கலாசாரப் பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பதிவாளர் கே. மகேசன் அறிவித்துள்ளார்.

விடுதி வசதிகள் வழங்கப் பட்டுள்ள மேற்படி பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் தத்தமது விடுதிகளுக்குத் தங்களது பீடங்களின் விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிக்கு முதல் நாள் பிற்பகல் 5.00 மணிக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை செங்கலடி என்னும் விலாசத்திற்கு சமுகமளிக்கும்படி பதிவாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# வெலிவேரிய வன்செயல் மேலும் ஒருவர் மரணம்


வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மற்றுமொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சுத்தமான தண்ணீர் வழங்குமாறு கோரி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொது மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது காயமடைந்த 19 வயதான குறித்த நபர், கொழும்பு தேசிய வைத்திய சாலையின் அவசரசிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயரிழந்துள்ளார். முன்னர் 17 வயதான பாடசாலை மாணவரொருவர் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது உயிழந்துள்ளதுடன் சுமார் 30 பேர் இந்த சம்பவத்தினால் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது

30. 


உருவில் காட்டப்படும் இலட்சனை எது?
1. பெற்றோலியக்கூட்டுத்தாபனம்   2. மின்சாரசபை   3. ஒலிம்பிக் சின்னம்


31. தரப்பட்ட உருக்களை பொருத்தும் போது கிடைக்கும் உரு எது?




32. நேற்றைக்கு முதல் நாள் புதன்கிழமை எனின் நாளை மறுநாள் என்ன கிழமை?
1. திங்கட்கிழமை   2. சனிக்கிழமை   3. ஞாயிற்றுக்கிழமை

33. நகரம் ஒன்றில் அதிகமாக இருப்பவை
1. மரங்கள்   2. வீதிகள்   3. கட்டிடங்கள்


34. சதுரவடிவ கடதாசி ஒன்றை இரண்டாக மடிக்கும் போது பெறமுடியாத வடிவம் எது?




❖ **35ஆம், 36ஆம் வினாக்களில் பகுதி 'அ' இல் உள்ள உருக்களும் பகுதி 'ஆ' இல் உள்ள உருக்களும் ஒரே மாதிரியாக இருப்பின் புள்ளிக்கோட்டில் A எனவும் உருக்கள் வேறுபடின் B எனவும் எழுதுக.**

35. 

(..............)

36. 

(..............)

❖ **37 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

37. என்னை என்வீட்டில் கோமாதா என்று போற்றி வருகின்றனர். என் உறைவிடமும் நன்றாக உள்ளது. வேளை தவறாது பசும்புற்களை தருகின்றனர். நானும் அதற்கு நன்றிக்கடனாக பாலை தருவேன் நான் யார்?
..............................................

38. நான் பாலைவனப்பிரதேசங்களில் வாழ்வேன். என்னை பாலைவனக்கப்பல் என்று அழைப்பர். நான் யார்?
..............................................

❖ **வாக்கியங்களில் உள்ள எழுத்துப்பிழைகளை திருத்தி எழுதுக.**

39. வாலைசேனையில் உள்ள கடதாசி தொளிச்சாலையை பார்வையிட்டோம்.
..............................................

40. பரிசலிப்பு விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
..............................................






# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013




பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



❖ **ஒரே கூட்டத்தை சேர்ந்த பொருட்கள் இடம் பெறும் அடைப்பை தெரிவு செய்க.**

01.  (1)    (2)    (3)

02.  (1)    (2)    (3)

❖ **பிழையான கருத்து இடம் பெறும் விடையை தெரிவு செய்க.**

03. 1. தந்தி ஒன்றினை தபாலகத்தில் அனுப்ப முடியும்.
2. இலங்கைக்கு வடக்கே இந்தியா உள்ளது.
3. தேயிலை இலங்கைக்கே உரித்தான பயிராகும்.

04. 1. கடுபுல் காலையில் பூக்கும்.
2. ஒலிம்பிக்போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.
3. இலங்கையின் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டமாகும்.

❖ **பாடலின் உதவியுடன் 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்தனவே
பூவின் நறுமணம் திசையெங்கும் பரவியதே
வீசிய காற்று குளிரைத் தரவே
எம் உள்ளம் அசைந்ததே

05. இப்பாடலில் கூறப்படுவது
1. தாமரை மலர்கள் பற்றி   2. எம் உள்ளம் பற்றி   3. வானவெளி பற்றி

06. வீசிய காற்று குளிரைத் தரவே என்பதன் கருத்து யாது?
1. வீசிய குளிர்ச்சியான காற்று
2. குளத்தில் நிறைந்த நீர்
3. பூக்களின் மணமுள்ள காற்று

❖ **பின்வரும் வினாக்களில் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தை நன்கு விபரிக்கும் விடையை தெரிக.**

07. ராகவன் மிகவும் கீழ்த்தரமான செயலை செய்துள்ளான்.
1. ராகவன் பிரபல்யமான செயலை செய்துள்ளான்.
2. ராகவன் மோசமான செயலை செய்துள்ளான்.
3. ராகவன் கௌரவமான செயலை செய்துள்ளான்.

08. யாழினி தன்னுடைய விருப்பப்படி வேலை செய்பவள் ஆவாள்.
1. யாழினி தன்போக்கில் நடப்பவள்.
2. யாழினி ஓர் சுயநலவாதி.
3. யாழினி ஓர் பைத்தியக்காரி.


09. DEFG → EFGH → FGHI → [ ]

1. FGHK 2. GHIJ 3. GIHL

10. ○ + D = 45 எனின் D இவ்வுருவின் பெறுமானம் யாது?


1. 22 2. 15 3. 30

11. முதலில் தரப்பட்ட சதுரவடிவத்தாளில் காணப்படும் புள்ளிக்கோடுகள் வழியே வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகளை கொண்டு அமைக்கக்கூடிய உருவை கண்டறிந்து கோடிடுக.





❖ 12ஆம், 13ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருவத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை தெரிவு செய்க.

12. 
1. வீண்விரயம் 2. உடற்பயிற்சி 3. பொறாமை

13. 
1. தகவல் 2. மின்சாரம் 3. சேமிப்பு

❖ 14ஆம், 15ஆம் வினாக்களில் இடைவெளிக்கு பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக.

14. 

15. 

❖ 16 தொடக்கம் 18 வரையிலான வினாக்களில் புள்ளிக்கோட்டுக்குரிய விடையின் கீழ் கோடிடுக.

16. குதிரை கனைக்கும் என்பது போல எருது
1. எக்காளமிடும் 2. கனைக்கும் 3. கத்தும்

17. யானையின் பெண் பிடி போல நண்டின் ஆண்
1. வடவை 2. அலவன் 3. கடுவன்

18. தென்னை தோப்பு போல பல்
1. தொகுதி 2. நிரை 3. வரிசை





ராகவியை விட காவியா உயரமானவள் எனினும் விதுஷாவை விட கட்டையானவள். தேவியை விட ராகவி உயரமானவள்


19. இவர்களில் உயரம் கூடியவர் யார்?
1. காவியா 2. ராகவி 3. விதுஷா


20. இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?
1. விதுஷா 2. தேவி 3. காவியா

❖ சில திண்ம உருக்களின் நிறைகள் கீழே தரப்பட்டுள்ளது.




21.  இவ்வுருவின் நிறை யாது? 1. 350g 2. 200g 3. 250g

22.  இவ்வுருவின் நிறை யாது? 1. 150g 2. 250g 3. 200g

23.  இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1. 7 2. 5 3. 6

24.  இக்குறியீடு குறிக்கும் சொல்லை தெரிவு செய்க.
1. திருமதி 2. விகடன் 3. வடிவம்

25. இரண்டு முகங்களும் ஒரு வளைமேற்பரப்பும், இரண்டு விளிம்புகளும் கொண்ட திண்ம வடிவம் எது?
1. கோளம் 2. கூம்பு 3. உருளை

26. இருபத்தாறு என்பதை உரோம எண்ணில் எழுதினால்
1. XXVI 2. XXIX 3. XXIV

❖ இடைவெளிக்கு பொருத்தமான இரு எழுத்துக்களை எழுதுவதன் மூலம் மூன்று சொற்கள் உருவாகும் இடைவெளிக்கு பொருத்தமான சொற்களை தெரிவு செய்க.

27. வ _ ம / மா / க _ ரை
1. ச, தி 2. ர, வ 3. ம, தி

28. விற _ / ம் / _ ளகு
1. கு, வ 2. கு, மி 3. தி, சு

29. கட்டத்தில் உள்ள தொழிலாளிக்கு தேவையான உபகரணத்தை தெரிவு செய்க.



# நிகழ்வுகளின் பதிவுகள்...





முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவின் பண்பாட்டு விழா... (40)






இலங்கை வங்கியின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வங்கிக் கிளையில் இடம்பெற்ற விசேட நிகழ்வு... (51)



யாழ். காதி அபூபக்கர் வீதியில் அமைந்துள்ள சிவல பள்ளியில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு.. (105)



இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையினால் அலுவலர்களின் சிறப்பான செயற்பாட்டினைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது... (90)



கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நடமாடும் சேவையின்போது... (18)







யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும், யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடாத்திய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆய்வரங்கு நிகழ்வு... (10)


# இந்தியத் தூதரகம் அருகில் ஆப்கானில் குண்டுத் தாக்குதல்



ஆப்கானிஸ்தானில் உள்ள இந்திய தூதரகம் அருகே தற்கொலைப் படை தாக்குதல் நடத்திய 8 பேர் பலியாகியுள்ளனர். ஜலாலாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் அருகே வெடிபொருட்கள் நிரப்பிய கார் ஒன்றை மோத வைத்து தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், 8 குழந்தைகள் பலியானார்கள். 22 பேர் காயமடைந்தனர். அருகில் இருந்த மசூதியில் தொழுகை முடித்து வெளியேறிவர்களே குண்டுவெடிப்பில் சிக்கினர். குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இந்திய தூதரகப் பகுதியில் கடும் துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. இதில், இந்திய தூதரகத்தில் இருந்தவர்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

# சிம்பாப்வே ஜனாதிபதி தேர்தல் வெற்றி பெற்றார் முகாபே



சிம்பாப்வேயில் கடந்த வாரம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் அந்நாட்டு ஜனாதிபதி ரொபர்ட் முகாபேயின் கட்சி வெற்றி பெற்றுள்ளது.


இதில் 210 ஆசனங்களில் 142 ஆசனங்களை கைப்பற்றி மூன்றில் இரண்டு வீத அதிக வாக்குகளால் முகாபேயின் கட்சி வெற்றிபெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல்கள் ஆணையம் அறிவித்துள்ளது.

அத்துடன் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வருவதற்கு இந்த வெற்றி போதுமானது என கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிம்பாப்வேயில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் சுதந்திரமானதும் நியாயமான முறையில் நடைபெற்றதாக அந்நாட்டின் தேர்தல்கள் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

என்றுமில்லாத வகையில் வாக்குப் பதிவுகள் சிறந்த முறையில் இடம்பெற்றுள்ளதாகவும் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் தயாராகின்றது குண்டு கண்டுபிடிக்கும் நவீன கருவி



இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சாதனம் முதன் முறையாக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு, உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படவுள்ளது.

குண்டுகளை விரைவாகக் கண்டறிய உதவும் இந்த சாதனம் வாஷிங்டனில் வெள்ளை மாளிகையை ஒட்டி அமைந்துள்ள அமெரிக்க வர்த்தகக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் சனிக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்க முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் வில்லியம் எஸ்.கோஹென் கூறுகையில், இந்தியா, அமெரிக்கா இடையே பரஸ்பரம் தொழில்நுட்ப பரிமாற்றம் நடைபெறுவதற்கு இந்த முயற்சி சிறந்த உதாரணமாக உள்ளது. இதன் மூலம் இரு நாடுகளும் பயன்பெறும் என்றார்.

இந்த சாதனத்தை தெற்கு கரோலினாவில் உள்ள குரோவே அன்ட் கம்பெனி உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும். இதுதொடர்பாக, டி.ஆர்.டி.ஓ. மற்றும் பிக்கி ஆகியவை இணைந்து குரோவே நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. ஐ.இ.டி., நைட்ரோ-ஈஸ்டர்ஸ், நைட்ரமைன்ஸ், டிரைநைட்ரோலூன், டைனமைட் உள்ளிட்ட பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகளை எளிதில் கண்டறிவதற்கு இந்த சாதனம் உதவும்.

உலகச் செய்திகள்

இதை எளிதாக எடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. விலை குறைவானது. வெடிகுண்டு வெடிப்பதற்கு முன்பும், பின்பும் இந்தக் கருவியைக் கொண்டு முக்கியமான தகவலை சேகரிக்க முடியும். இந்திய இராணுவம், துணை இராணுவம் மற்றும் காவல் துறையில் இந்த சாதனம் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடுகிறார் ரம்யா



கர்நாடகத்தின் மாண்டியா எம்.பி தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரபல நடிகை ரம்யா போட்டியிட உள்ளார்.பிரபல கன்னட நடிகையான ரம்யா, தமிழில் குத்து, கிரி, பொல்லாதவன் மற்றும் வாரணம் ஆயிரம் உட்பட பல படங்களில் நடித்துள்ளார்.


இவர் கர்நாடக முன்னாள் முதல்வரும், தற்போதைய மத்திய அமைச்சருமான எஸ்.எம். கிருஷ்ணாவின் பேத்தியாவர். இந்நிலையில் இவர் மாண்டியா எம்.பி தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர் புறநகர் தொகுதி எம்.பி.யாக இருந்த குமாரசாமியும், மாண்டியா எம்.பி.யாக இருந்த சலுவரய்யாசாமியும் தங்களது பதவியை ராஜினாமா செய்து விட்டு, கடந்த சட்டசபை தேர்தலில் போட்டியிட்டனர்.

இதனால் இந்த இரண்டு தொகுதிகளுக்கும், வரும் 21 ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கவுள்ளது.

நடிகை ரம்யா பெயரை முதலமைச்சர் சித்தராமையா, கர்நாடக காங்கிரஸ் தலைவர் பரமேஸ்வரா ஆகியோர் கட்சி மேலிடத்துக்கு சிபாரிசு செய்தனர்.இதை பரிசீலித்த மேலிடம் அவரை வேட்பாளராக இன்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லை



தமிழ்நாட்டில் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கேப்டன் தொலைக்காட்சியில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

நான் பல தடவை சொல்லியிருக்கிறேன் சட்டம் ஒழுங்கு கெட்டுபோய் உள்ளது.

பிஜேபி மூத்த தலைவர் அத்வானி சேலம் வருகிறார் எனறவுடன் சேலத்தில் பொலிஸ் குவிக்கப்பட்டு, பொலிஸ் கட்டுப்பாட்டில் சேலமே இருந்தது என்றனர்.

ஆனால் அங்கு பிஜேபியைச் சேர்ந்த ஒரு கட்சிக்காரர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் அரசியல் கட்சி தலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது. தே.மு.தி.கவை வழக்குகளால் முடக்க முடியாது என்றார்.

# அமெரிக்க தூதரகங்களுக்கு நேற்று விடுமுறை




தீவிரவாத் தாக்குதல் அச்சத்தின் காரணமாக இஸ்லாமிய நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக அமெரிக்க தூதரகங்களுக்கு வாரந்தோறும் செவ்வாய்கிழமை விடுமுறை அளிக்கப்படுவது வழக்கம். ஆனால் தீவிரவாத தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக இஸ்லாமிய நாடுகளில் அமெரிக்க தூதரகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அறிக்கை வெளியிட்டுள்ள தகவல் அதிகாரியான மேரி ஹார்ப், தூதரக ஊழியர்கள் மற்றும் அங்கு வருகை தருவோரின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்கத் தூதரகங்கள் நேற்று மூடப்படும் எனத் தெரிவித்துள்ளார். எனினும் எந்த அமைப்பு அச்சுறுத்தலை விடுத்தது என்றும், எந்த நாட்டில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது என்றும் அதிகாரப்பூர்வமான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை..

# பரிசாக வழங்கப்படும் குழந்தைகள் பாகிஸ்தானில் கிளம்பியது சர்ச்சை



பாகிஸ்தானில் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில், வெற்றி பெற்றவர்களுக்கு குழந்தைகள் பரிசாக வழங்கப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் மிகப் பிரபலமான நிகழ்ச்சி தொகுப்பாளரான ஹுசைன், அமான்ரம் ஜான் என்ற நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருகிறார்.

மதம் தொடர்பான கேள்விகள், விவாதங்களை கொண்ட இந்த நிகழ்ச்சியில் வெற்றி பெறுபவர்களுக்கு, இதுவரை மொபைல் போன், வாகனங்கள் உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் தற்போது குழந்தைகள் பரிசாக வழங்கப்படுகிறது.

விவாத நிகழ்ச்சியின் ரேட்டிங்கை அதிகப்படுத்தும் முயற்சியாகவே இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஆனால், கைவிடப்பட்ட குழந்தைகளை, குழந்தையற்ற தம்பதிகளுக்கு பரிசளிப்பதில் தவறில்லை என்கிறார் ஹுசைன. இந்த நிகழ்ச்சியின் மூலம் குழந்தையை பரிசாக பெற்ற ஆயிஷா ரியாஸ் என்ற பெண், இந்த நிகழ்ச்சி தன்னை ஒரு தாயாக முழுமைப்படுத்தி இருப்பதாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் கடந்த ஒரு மாதத்தில் 3 குழந்தைகள் பரிசாக வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆதரவற்ற குழந்தைகள் அமைப்பு ஒன்றுடன் இணைந்து இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

# வெலிவேரியவில் சூட்டிற்கு உத்தரவிட்டவர் யார்?

## விசாரணையின் பின் தெரியவரும் என்கிறது இராணுவம்



வெலிவேரியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த கட்டளையிட்டது யார் என தன்னால் கூற முடியாது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் விசாரணைகள் முடிந்த பின் கருத்துக் கூறமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெலிவேரிய மோதலில் இராணுவமே பொதுமக்களை சுட்டதாக பல தரப்பிலிருந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இராணுவத்தைப் போன்ற நீதியான நிறுவனம் திடீரென இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தியது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே விசாரணை முடிந்தபின் தெளிவான பதில் அளிக்கப்படும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை இரண்டு வாரங்களில் இராணுவத் தளபதிக்கு வழங்கப்படும் என அவர் கூறினார்.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரைப் பயன்படுத்த முடியுமா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த இராணுவப் பேச்சாளர் தனக்கு சாஸ்திரம் பார்க்கத் தெரியாது என்றார்.

வெலிவேரிய சம்பவத்தில் இராணுவம் அவ்விடத்துக்குச் சென்றமை கலவரத்தை ஏற்படுத்துவதற்கு அல்ல எனவும் அமைதியை ஏற்படுத்தி மூடப்பட்டிருந்த பாதையை திறப்பதற்குமே என அவர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை இராணுவம் மதிப்பதாகவும் ஆனால் அன்றைய சூழ்நிலை பற்றி ஊடகவியலாளர்களே அறிவர் எனவும் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோது பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார்.

விசாரணை நிறைவு பெற்று இராணுவ சட்டத்திற்கு அமைய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் எனவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

# உடுவில் கற்பக விநாயகர் உண்டியல் உடைத்து திருட்டு



(உடுவில்)

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலய உண்டியல் இரண்டாவது தடவையாக கடந்த வியாழக்கிழமை இரவு திருடர்களால் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் முழுவதும் திருடப்பட்டுள்ளது.

அண்மையில் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நிறைவடைந்திருந்த நிலையிலேயே இவ் உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னரும் இதே உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்ட நிலையில் ஆலய நிர்வாகத்தினரால் அது திருத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

எனினும் கடந்த வியாழக்கிழமை இரவு திருடர்கள் கூரிய ஆயுதமொன்றைப் பயன்படுத்தி உண்டியலின் பூட்டை உடைத்து, பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

# மும்மொழி தெரிந்த பிரஜைகள் 10 வருடங்களில் சாத்தியம்


(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சகல பிரஜைகளும் 10 வருடங்களின் பின்னர் மும்மொழிகளும் தெரிந்தவர்களாக இருப்பர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேசிய மொழிக் கொள்கை மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தினை அமுலாக்கும் பல முக்கிய திட்டங்கள் ஆரம்பித்துள்ளது. இதற்கமைய,

அறிவித்தல் பலகைகள் 3 மொழிகளிலும் இருத்தல், அரசாங்க நிறுவனங்களில் பொது மக்கள் 3 மொழிகளிலும் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளல், அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள் 3 மொழிகளிலும் இருத்தல் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், மாணவர்களுக்கும் மொழிப் பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல் போன்றவற்றின் மூலம் மொழிப பிரச்சினைக்கான தீர்வு கிட்டும் எனவும் அரசு தெரிவிக்கின்றது. (இ)

# தேர்தல் நடைபெறும் பகுதிகளில் நடைபவனி, ஊர்வலங்களுக்குத் தடை



எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி வட, வடமத்திய, வடமேல் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அப்பகுதிகளில் நடைபவனிகள், பிரசார ஊர்வலங்கள் மற்றும் மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டங்களை நடத்தவேண்டாம் என தேர்தல்கள் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல்வேறு தரப்பினர் ஏற்பாடு செய்யும் இத்தகைய நிகழ்வுகளை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கலாம் என்பதால் தேர்தல்கள் செயலகம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதற்கமைய வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி வரை நடைபவனிகள், பிரசார ஊர்வலங்கள் மற்றும் தெளிவூட்டல் கூட்டங்களை நடத்தக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயர்தரப்...

முடியாது என்பதுடன் பரீட்சை மண்டபத்தில் கடமையாற்றும் மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் என எவரும் பரீட்சை நடைபெறும் வேளையில் மண்டபத்தைவிட்டு வெளியே செல்லமுடியாது. அவ்வாறு யாராவது சென்றால் பொலிஸார் அவர்களைக் கைது செய்யவும் முடியும்.

பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்களை நடத்தல், விளையாட்டுக்களை நடத்தல், போட்டிகளை நடத்தல் என எந்த வகையான செயற்பாடுகளையும் மேற்கொள்ளக் கூடாதென பரீட்சைத் திணைக்களத்தினால் அனைத்து மாகாண கல்வித் திணைக்களங்கள், பணிப்பாளர்கள் அனைவருக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

### மாகாணசபைத்...

தெரிவித்துள்ளது. எனினும் இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு கண்காணிப்பாளர் களை கடமையில் ஈடுபடுத்துவதற்கே மேலும் 20 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல்களை கண்காணிப்பதற்கு 11 சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஏ.எல்.ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வதேச கண்காணிப்பாளர்களாக யாரை நியமிப்பது என்பது குறித்தும் எதிர்வரும் வாரத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மூன்று மாகாணசபைகளுக்காகவும் 131 அரசியல் கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளன: இவற்றில் 126 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், சுயாதீன குழுக்கள் 79 வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன, இதில் 75 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய மூன்று மாகாணங்களிலும் மொத்தமாக 2279 அரசியல் கட்சி வேட்பாளர்களும், 1506 சுயாதீன குழு வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பரீட்சை...

பரீட்சைக்கான பாதுகாப்பு கடமையில் நேற்று முன்தினம் இரவு ஈடுபட்டிருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தரே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக கடமையாற்றும் 48 வயதுடைய பண்டாரவளையைச் சேர்ந்த ஈ.எம்.புத்ததாச (வயது-48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். எனினும் இவர் மாரடைப்பின் காரணமாக மரணமடைந் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### கொழும்பு...

கலன் முனையத்தில் சீனா முதலீடு செய்துள்ளதன் மூலம், தனது விநியோகப் பாதையை தக்கவைத்துக் கொண்டுள்ள்தாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் புதிய கொழும்புத் துறைமுக முனையம் குறித்து இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், அதனால் அதிகம் பயனடையப் போவது இந்தியாவே என்றும் துறைமுக அதிகாரசபையின் தலைவர் பிரியத் பந்து விக்கிரம கூறியுள்ளார்.

எமது துறைமுகங்களில் எந்த இராணுவத் தளங்களையும் அமைக்க அனுமதிக்கமாட்டோம், எவரையும், எந்தவொரு மூலோபாய இராணுவப் பயன்பாட்டுக்கும் அவற்றைப் பயன்படுத்தவும் விடமாட்டோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### 20 தமிழக...

களை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இராமேஸ்வரம் பாம்பன் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### நவிப்பிள்ளைக்கு...

தாம் சந்தித்து, பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசக்கூடியதாக இருக்கும் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும், ஜனநாயக, நீதிக் குறைபாடுகள், 2010 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தான் அநீதிக்கு முகம் கொடுக்க நேரிட்டது குறித்து நவநீதம்பிள்ளையுடன் கலந்துரையாட முடியும் என்று நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், நவநீதம்பிள்ளையின் பயணத்திட்டத்தை, அரசாங்கமும், ஐ.நா. பணியகமும் இணைந்து ஒருங்கிணைக்கும் என்று வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையில், நவநீதம்பிள்ளையை சரத் பொன்சேகாவினால் சந்திக்க முடியும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள் ளார். இதேவேளை, நவநீதம்பிள்ளை யாரைச் சந்திக்கவேண்டும் என்பதனை இலங்கை அரசாங்கம் தீர்மானிக்காது எனவும் அவ்வாறு செய்ய முடியாது எனவும் நவநீதம்பிள்ளையின் பிரதம பாதுகாப்பு அதிகாரி ஆப்ரஹாம் மாத்தாய் தெரிவித்துள்ளார்.

### புலிகளின்...

கல்கிஸை ஹோட்டலில் வைத்து விடுதலைப் புலிகள் இயககத்தினால் கடத்திச் செல்லப்பட்டதாக தகவல்கள் வெளியானது.

வெள்ளை வானில் சிலாபம் நோக்கி கடத்திச் செல்லப்பட்ட ஜெயரட்ணம் படகு மூலம் மன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின் விடத்தல் தீவிலிருந்து கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜெயரட்ணம் அடைக்கப்பட்டிருந்த சிறையில் இராணுவ கப்டன் ஒருவரும் புலிகளுக்கு எதிராக செயற்பட்ட நபர்களும் புலிகள் இயக்கத்தில் தவறிழைத்த நபர்களும் தங்க வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 30 பேர் 2006 மே மாதம் கைகளுக்கு விலங்கிட்ட வண்ணம் லொறிகளில் ஏற்றப்பட்டு ஒட்டுசுட்டான் காட்டில் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டனர்.

அத்தோடு 2006 யூலை மாதம் குறித்த சிறையிலிருந்த 50 பேர் லொறியிலும் றோசா பஸ்ஸிலும் அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டதாக சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார். இராணுவ கப்டன் விஸ்வமடு தொட்டியடி பிரதேசத்தில் சிறை வைக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கொலை தொடர்பிலும் கொலை செய்யப்பட்ட நபர்கள் மற்றும் இடம் தொடர்பிலும் நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நீதவான் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# மக்களுக்கு சேவையாற்றும் அரசியல்வாதிகள் குறைவு

## மனம் வெதும்புகிறார் அமைச்சர் ராஜித



நாட்டில் உள்ள பல அரசியல வாதிகள் மக்களுக்கு சேவை யாற்றும் நோக்கினை விடுத்து தமது வயிற்றுப் பிழைப்பிற்கா கவே அரசியல் நடத்தி வரு கின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றஞ்சாட்டியுள் ளார்.

எனவே நாட்டில் தற்போது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அரசியல் செய்வோரின் எண் ணிக்கை வெகுவாக குறைந் துள்ளது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,


அரசியல் வாதிகள் பலர் தங் களுடைய வயிற்றுப் பிழைப் பிற்காகவே அரசியல் நடாத் துகின்றனர். அரசியல் என்பது இரண்டு பக்கங்களும் வெட்டக் கூடிய ஓர் ஆயுதமாகும். அத னைக் கொண்டு நல்லதும் செய் யலாம், கெட்டதும் செய்யலாம்.

மேலும் குட்டையான ஆடை யணிந்த மாணவிக்கு தண்டனை வழங்கிய ஆசிரியையினை தண்டித்த அரசியல்வாதிகளை மக்களே அரசியலுக்கு கொண் டுவந்தனர். அவ்வாறு செய்த ஆசிரியையினை மண்டியிடச் செய்யாது, மாணவியின் தாயா ரையே மண்டியிடச் செய்திருக்க வேண்டும்.

அத்துடன் பணத்திற்காக கொலை செய்யும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களும் நாட் டில் இருக்கின்றார்கள். இதற் கும் மேலாக சில அரசியல் வாதிகளின் வருமான விபரங் கள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடமே காணப்ப டுகின்றது.

இதனால் வருமான வரித் திணைக்களத்தினாலும் அவர் களது வருமான விபரங்களை வெளியிட முடிவதில்லை. எவ் வாறாயினும் நாட்டில் இன ஐக் கியத்தை கட்டியெழுப்ப அனை த்து இன மக்களும் ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என வும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

# தென்னாபிரிக்கா வசம் ருவன்ரி 20 தொடர்



இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவ்து ருவெண்டி 20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 22 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னா பிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக டுமினி30, மில்லர் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர, சேனநாயக்க 2, மலிங்க 1 விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களை மட்டுமே பெற்று 22 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது. இலங்கை அணி சார்பாக சங்கக்கார 39, பெரேரா 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சோடசோபே, மோர்கல் 2 விக்கெட்டுக்களை கைப்பற் றினர். ஆட்டநாயகனாக மில்லர் தெரிவானார்.

# வெடிபொருள் வெடிப்பு; அரியாலையில் பரபரப்பு

(அரியாலை)

குப்பைக்கு தீ மூட்டியபோது குப்பைக்குள் இருந்த வெடி பொருள் வெடித்ததில் அரி யாலைப் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

அரியாலை பூம்புகார் 3 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள வெற் றுக் காணி ஒன்றில் இருந்த குப்பைகளை காணி உரிமை யாளர் தீ முட்டிய வேளையி லேயே இச்சம்பவம் இடம் பெற் றுள்ளது.

அச்சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் . எதுவும் ஏற்பட வில்லை என்றும் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற் கொள்ளப்பட்டு வருவ தாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் கட்டுப் பாட்டிற்குள் இருந்த இப் பகுதியில் 2010 ஆம் ஆண்டில் மக்கள் மீள் குடியேற்றம் செய் யப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (25)

# 4050 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்கள் 4 ஆயிரத்து 50 பேர், புதிதாக சேவையில் இணைத்துக் கொள் ளப்படவுள்ளனர்.

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் ஆரம்பமாக வுள்ளதாக அரச முகாமைத்துவ மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 8 ஆயி ரம் பேரிடம் நேர்முகப்பரீட்சை கள் நடத்தப்படவுள்ளன. அவர்க ளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களுக்கு 3 மாதங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அவர்கள் அரச சேவை யில் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நாயகம் ஜே.பீ.ரணபுர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நாட ளாவிய கிராம உத்தியோகத்தர் களுக்கு காணப்படும் வெற்றி டம் நிவர்த்தி செய்யப்பட வுள்ளது. இதேவேளை புதிதாக சேவையில் இணைத்துக் கொள் ளப்படவுள்ள கிராம உத்தி யோகத்தர்களுக்கு லப்டொப் உபகரணமும் வழங்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பழை பிரதேசத்தில் பொருத்தப்படும் மின் விளக்குகள்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பிரதேச சபையினால் மீளக்குடியேறும் பிரதேசங்களில் கடந்த மாதம் மாத்திரம் நூற்றுக்கு மேற்பட்ட வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது என பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட கட்டுவன், சிந்திப்பந்தி, இளவாலை மற்றும் குளமங்கால் ஆகிய பகுதிகளுக்கு இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சபையின் நிதியின் மூலம் கட்டம் கட்டமாக சுமார் 1,200 இற்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்தும் வீதி விளக்குகள் இல்லாத இடங்களுக்கு பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### சாதாரண மாணவர்களுக்கான

# அடையாளஅட்டை பெற அதிபர்கள் அசிரத்தை

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடை யாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பதற்காக விண்ணப்பங் களைச் சமர்ப்பிப்பது தொடர் பில் அதிபர்கள் உரிய கவ னத்தை செலுத்தத் தவறியுள்ள தாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அக்ரோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் 16 வயது பூர்த்தியாகும் மாணவர்களின் விண்ணப்பங் களை காலதாமதமின்றி அனுப் பிவைக்குமாறு ஏற்கனவே வேண்டுகோள் விடுக்கப்பட்டி ருந்ததாக ஆட்பதிவுத் திணைக் கள ஆணையாளர் ஆர்.எம். எஸ்.சரத்குமார் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் குறைந்தள விலான விண்ணப்பங்களே இதுவரை கிடைத்துள்ளதாகவும் ஆட்பதிவுத் திணைக்களம் குறிப் பிட்டுள்ளது.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, நவ ம்பர் மாதம் பிறந்த மாணவர் களுக்கான விண்ணப்பங்களை யும் அனுப்பிவைக்குமாறு ஆட் பதிவு ஆணையாளர் பாட சாலை அதிபர்களைக் கேட் டுள்ளார்.

எவ்வாறாயினும் நவம்பர் மாதம் 16 வயது பூர்த்தியாகும் பரீட்சாத்திகளுக்கும் தபால் அடையாள அட்டைகளை பெற் றுக்கொடுப்பதற்கும் அதிகாரி கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆட்பதிவு ஆணையாளர் மேலும் தெரி வித்துள்ளார்.

# வெலிவேரிய சூட்டுச் சம்பவம்; அரசும், இராணுவமுமே பொறுப்பு

## - என்கிறார் சரத்பொன்சேகா

(கொழும்பு)

வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேசத்தில் இளைஞர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மைக்கான பொறுப்பை அர சாங்கமும், இராணுவமுமே ஏற்க வேண்டும் என முன்னாள் இரா ணுவத் தளபதி சரத் பொன் சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவத்தின் மூலம் இராணுவத்திற்கு வரலாற்றில் அழிக்க முடியாத கரும்புள்ளி ஏற்பட்டு விட்டது. சாதாரணமாக நியாயமான கோரிக்கை ஒன்றை விடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

நாங்கள் மருத்துவமனைக்கு சென்று சம்பவத்தில் பாதிக்கப் பட்டவர்களிடம் சம்பவம் தொடர்புாக விசாரித்தோம். துப் பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் களில் பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாது வீதியில் சென்றவர்கள் என்பது விசாரித் ததில் தெரியவந்தது.

வீதியில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதனைக் கண்டு, அவர்கள் கூறியதைக் கேட்ட போது, இராணுவ சீரு டையை அணிந்திருந்த இரா ணுவ வீரன் என்ற முறையில், எனக்கு வெட்கமாக இருந்தது என்றார்.

## ஆஷஸ் தொடர்

### மூன்றாவது போட்டி

நான்காம் நாள் ஆட்டம்
இங்கிலாந்து: 368
(முதல் இனிங்ஸ்)
அவுஸ்ரேலியா: 172/7, அவுஸ்ரேலியா 331 ஓட்டங்கள் முன்னிலையில். இன்று போட்டியின் இறுதி நாள்.


## பணியாளர் தேவை

கனடாவிலுள்ள ரேடியோ ஒன்றிற்கு யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் இருந்து இயங்குவதற்கு இரண்டு ஒலிபரப்பாளர்களும், ஒரு ஆங்கிலத்தில் இருந்து தமிழிற்கு செய்தி தயாரிப்பவரும் தேவைப்படுகின்றனர்.

உங்கள் சுய தரவுகளுடனான விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

விளம்பர இல - 02

மே.பா, **தினமுரசு**

**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.** (இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.